பக்கங்கள்: 20+18 (வர்ணத்தில்)=38

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 26 வியாழக்கிழமை (11-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:352

# தலைவர் பிரபா - பீற்றர்ஸன் இன்று சந்தித்து முக்கிய பேச்சு

## பாலா சனியன்று லண்டன் திரும்புகின்றார்

கிளிநொச்சி,நவ.11

ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதானப் பேச்சுக்களை முன் நகர்த்துவதில் திருப்பத்தை ஏற்படுத்தக்கூடிய முக்கிய சந்திப்பு இன்று கிளிநொச்சியில் நடைபெறவிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனையும் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களையும் நோர்வே நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் இன்று சந்திக்கின்றார்.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக இருதரப்புக்களினதும் பிந்திய - தெளிவான - நிலைப்பாடுகள் இன்றைய சந்திப்புக்குப் பின்னர் தெரியவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரைச் சந்திப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் இன்று காலை விசேட ஹெலிகொப்டரில் கிளிநொச்சி வந்தடைந்தவுடன் உயர்மட்டச்சந்திப்பு இடம்பெறும்.

நேற்றுமுன்தினம் கொழும்புக்கு வந்துசேர்ந்த பீற்றர்ஸன், நேற்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைச் சந்தித்து அவருடன் விரிவாகப் பேச்சு நடத்தியிருந்தார். இன்று கிளிநொச்சியில் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கிறார். இச்சந்திப்பில் தலைவர் பிரபாகரனுக்கு உதவியாக மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் உடனிருப்பார். அவருடன் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், பிரதேசப் பொறுப்பாளர்கள் மற்றும் துறைசார் பொறுப்பாளர்களும் பங்குபற்றுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனுடன் நோர்வேத்தரப்பில் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், கொழும்புக்கான தூதர் பிரட்ஸ்கர் ஆகியோர் கலந்துகொள்வர்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான அரசுத் தரப்பின் பிந்திய நிலைப்பாட்டை நோர்வே அமைச்சர், புலிகளின் தலைவரிடம் இன்று

(8ஆம் பக்கம் பார்க்க)

# சமஷ்டி முறைத் தீர்வை ஏற்பதாகப் புலிகளை பகிரங்கமாக அறிவிக்கக் கோருவார் ஜனாதிபதி

## அத்தகைய கோரிக்கை எதனையும் புலிகள் நிராகரிப்பர் எனத் தகவல்

கொழும்பு,நவம்பர்11

**இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றை ஏற்றுக்கொள்ளத் தயார் என்பதை விடுதலைப் புலிகள் இயக்கம் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.**

**சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக இதனைப் பகிரங்கப்படுத்திவிடவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேத் தரப்பின் ஊடாகப் புலிகளைக் கோருவார் என்று தெரியவருகிறது.**

**அரசுத் தரப்பிலிருந்து இத்தகைய கோரிக்கை விடுக்கப்படுமானால் அதனைப் புலிகள் அடியோடு ஏற்கமாட்டார்கள் என்று புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்களில் கூறப்படுகிறது.**

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் இன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்கும்போது அரசுத் தரப்பின் நிலைப்பாடுகளை உள்ளடக்கிய செய்தி ஒன்றைக் கையளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புலிகள் ஒற்றை ஆட்சிமுறையை ஏற்று - இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றை ஏற்றுக்கொள்வதாக - உறுதியளிக்கவேண்டும் என்ற ஜனாதிபதியின் கோரிக்கை அந்தச் செய்தியில் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஐ.தே.க. அரசுடன் விடுதலைப் புலிகள் நடத்திய சமாதானப் பேச்சுக்களின்போது ஒரு கட்டத்தில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றைக் காண்பதற்கான தேடல்களில் ஈடுபடுவதற்கு இருதரப்புகளும் இணங்கியிருந்தன.

மூன்றாம் கட்ட சமாதானப் பேச்சுக்களின் போதே இந்த இணக்கம் எட்டப்பட்டிருந்தது.

'சமஷ்டி அமைப்படையிலான தீர்வு ஒன்றுக்கான தேடல்களில் ஈடுபடுவது என்ற அன்றைய இணக்கப்பாட்டினை வைத்துக்கொண்டு, புலிகள் மீது அழுத்தம் கொடுத்து, சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றை ஏற்பதாக அவர்களைப் பகிரங்கமாக அறிவிக்கச் செய்து விடும் முயற்சியில் ஜனாதிபதி இப்போது தீவிரமாக இறங்கியிருக்கிறார் என்று சில அரசியல் வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. ஆனால், பேச்சுக்கு நிபந்தனை விதிக்கும் பாணியிலான இத்தகைய கோரிக்கை எதுவும் அரசுத் தரப்பில் இருந்து முன்வைக்கப்பட்டால் புலிகள் அதனை அடியோடு நிராகரிப்பர் என்று புலிகளின் உயர்மட்டத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)




## 'ஏபி' வகை இரத்தம் தேவை என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு "ஏபி" வகை இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதாக இரத்த வங்கி அதிகாரி தெரிவித்துள்ளார். "ஏபி" வகை இரத்தம் உடையவர்கள் உடனடியாகத் தம்முடன் தொடர்புகொள்ளலாம் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ-12)

## சிறுவர் இல்லம் மீது கிரனேட் வீச்சு!

ஏறாவூர்,நவ.12

வாழைச்சேனை - விபுலானந்த வீதியில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தின் மீது நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கிரனேற் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் சிறுவர் இல்லத்தின் கதவுகள், (8ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ நிர்வாகக் கட்டமைப்புகளை உலக நாடுகள் வியந்து பாராட்டுகின்றன

## சட்டக்கல்லூரித் திறப்புவிழாவில் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்



கிளிநொச்சி,நவ.11

தமிழீழத்தில் நாம் பேணிவருகின்ற நிர்வாகக் கட்டமைப்புகளைச் சர்வதேச நாடுகள் மிக நுணுக்கமாகப் பரிசீலிக்கின்றன. நீதி, நிர்வாகத்துறை, காவல்துறை, நிதித்துறை, பொருண்மியம் ஆகிய கட்டமைப்புக்களின் சிறப்பையும் அவற்றின் செம்மையான அமுலாக்கலையும் அந்த நாடுகள் வெகுவாகப் பாராட்டுகின்றன.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் நீதித்துறையின் சட்டக்கல்லூரி நேற்று கிளிநொச்சியில் தொடங்கி வைக்கப்பட்டது.

நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா தலைமையில் திறப்புவிழா நடைபெற்றது. பொதுச்சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றினார். அதையடுத்து மங்கள விளக்கை விடுதலைப் புலிகளின் மகளிர் பொறுப்பாளர் தமிழினியும், யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் செல்வி அபிமன்னசிங்கமும் ஏற்றினர்.

தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தேசியக் கொடியை ஏற்றினார்.

மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார் அடேல் பாலசிங்கம் நாடாவை வெட்டிக கல்லூரியைத் திறந்துவைத்தார். அதையடுத்து துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்துவந்த சட்டத்தரணிகள், விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது போராட்ட வரலாற்றில் இந்தச் சட்டக் கல்லூரியின் திறப்புவிழாவை ஒரு முக்கிய படிக்கல்லாகவே பார்க்கவேண்டும். சாதாரண கலலூரித் திறப்புவிழாவாகக் கருதாமல், எமது தியாகத்தின் விளைவாகத்தான் இதனைப் பார்க்கிறேன்.

தமிழர்களுக்கு நீதிமறுக்கப்பட்டபோது தான் போராட்டம் முகிழ்ந்தது. எமது மக்களுக்குச் சகல உரிமைகளும் மறுக்கப்பட்டபோது தான் எமது தலைவரின் தலைமையில் ஆயு

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கவேண்டியவர்கள் அரசியல்வாதிகளின் அடிவருடிகளாகச் செயற்படுகின்றனர்

## பொலீஸ்துறைக்குச் சாட்டை அடிகொடுத்தார் ஜனாதிபதி



கொழும்பு,நவ.11

"அரசியல்வாதியின் நாய்க்குட்டிக்கு உண வூட்டிய பொலீஸாருக்கும் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள் ளன. சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலீஸார் அரசியல்வாதிகளின் அடிவருடிகளாக இருக்கும்வரை நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றவேமுடியாது."

- இவ்வாறு பொலீஸ்துறையினருக்கு சாட்டையடி கொடுத்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்றுமுன்தினம் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற குற்றவியல் தடுப்பு தொடர்பான தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இப்படி விளாசித்தள்ளினார்.

சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவியேற்று பத்து ஆண்டுகள் நிறைவுபெற்ற தினத்தில் ஜனாதிபதி நீதித்துறை மீது இப்படிப் பாய்ந்து விமர்சித்தது அங்கு கூடியிருந்த பாதுகாப்பு உயா அதிகாரிகளுக்குப் பெரும் தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்திவிட்டது.

அங்குதொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, நீதிமன்றங்களையும் விட்டுவைக்கவில்லை. பொலீஸ் திணைக்களமும் நீதிமன்றங்களும் மோசடிக்காரர்களின் கூடாரமாக மாறிவிட்டன. நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துவிட்டன.

இதனை "டிரான்ஸ் பரன்ஸி' என்ற சர்வதேச நிறுவனம் வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது. ஊழல்மோசடிகள் நிறைந்த நிறுவனங்களின் பட்டியலில் பொலீஸ் திணைக்களம் முதலிடத்தைப் பிடித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது சர்வதேச மட்டத்தில் இலங்கைக்குப் பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

பொலீஸார் தமது கடமைகளை மறந்து தவறான வழியில் பணம் சம்பாதிக்கவும், பதவியுயர்வுக்காக அரசியல்வாதிகளின் பின்னால் அலைந்து திரிந்துகொண்டிருக்கின்றனர். இந்த இலக்கை அடைய எந்தவிதமான சட்டவிரோதச் செயலையும் துணிந்து செய்கின்றனர்.

பொலீஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்பவர்களைப் புறக்கணித்து குற்றவாளிகளுக்குத் தகவல் அனுப்பி ஆதாயம் தேடுகின்றனர். உண்மைக்குற்றவாளிகளின் ஆதாரங்களை அழித்து நிரபராதிகளைத் தண்டிக்கின்றனர்.

பல பொலீஸ் அதிகாரிகள் அரசியல்வாதிகளின் அனுசரணையுடன் பாதாள உலகக் கிரிமினல்களின் கையாள்களாகச் செயற்படுகின்றனர். இப்பொழுது சில பொலீஸ் அதிகாரிகள் மாதாந்தம் பத்து லட்சம் ரூபாவுக்கு மேல் குறுக்குவழியில் வருமானம் பெறுகின்றனர். கள்ளமாடு கடத்துபவர்களிடம் கப்பம் வாங்கிய பொலீஸ்காரர்களின் விவரமும் என்னிடம் உண்டு.

இப்படியான ஊழல்பேர்வழிகள் இனிமேலும் தப்பமுடியாது. உங்களைத் திருத்திக்கொள்ளாவிட்டால் உங்களை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது. பொலீஸ் தண்டனைச் சட்டக்கோவையில் பாரிய திருத்தங்களை ஏற்படுத்த சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

மற்றும் ஒருபக்கத்தில் நீதிமன்றங்களும், பக்கச்சார்பாகச் செயற்படுகின்றன. தமக்கு வேண்டியவர்களைப் பாதுகாப்பதற்காகச் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்துகின்றன.

குற்றவாளிகள் காப்பாற்றப்படுகின்றனர்; நீதியையே விலை பேசுகின்றனர். இப்படியானவர்களால்தான் இன்று சர்வதேச மட்டத்திலும் நாட்டுக்குத் தலைகுனிவு ஏற்பட்டுள்ளது என ஆவேசமாகக் கூறினார் ஜனாதிபதி.

அரச ஊழியர்களுக்கு 70 வீத சம்பள உயர்வு வழங்கப்படும். அதேவேளை, பொலீஸாருக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் நியாயமான சம்பள உயர்வு வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார். (க-8)

### முதியோர் இல்லத்தில் தீபாவளி நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.11

கைதடி முதியோர் இல்லத்தில் இனிய இதயங்கள் அமைப்பின் தீபாவளித் திருநாள் நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இனிய இதயங்கள் அமைப்பின் தலைவர் சி.விக்னராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் கே. பாலசுப்பிரமணியம், முதியோர் இல்ல அத்தியட்சகர் செ.யோகானந்தராசா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

# வாகன உடைமை மாற்றத்தை மேற்கொள்ள 'ஒருநாள் துரிதசேவை' அறிமுகம்

யாழ்ப்பாணம்,நவ.11

வாகனங்களின் உடைமை மாற்றங்களை ஒரே தினத்தில் மேற்கொள்ளுவதற்கான 'ஒருநாள் துரித சேவையை மோட்டார் போக்குவரத்துத்திணைக்களம் ஆரம்பித்துள்ளதாக யாழ். மாவட்ட வாகனப் போக்குவரத்துப் பரிசோதகர் ஆர்.ஏ.ரி.குலாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான வாகன உரிமையாளர்கள் தமது உடைமைகளை மாற்றுவதற்கு இங்கு வசதிகள் இன்மையால் பல்வேறு அசௌரியங்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றைத் தவிர்க்கும் முகமாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள கொழும்புத் தலைமையகத்தினால் இந்தத் துரித சேவைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்மூலம் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த வாகன உரிமையாளர்கள் தமது உடைமைகளை ஒரே நாளில் மாற்றம் செய்து கொள்ள முடியும்.

இதேவேளை, சாரதி அனுமதிப்பத்திரம் பெற்று அதனைத் தவறவிட்டவர்களுக்கும் கணனி மயப்படுத்தப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் துரித கதியில் வழங்குவதற்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரத்தைத் தவறவிட்டவர்கள் அதற்கான பொலீஸ் அறிக்கை மற்றும் அதற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஒரே நாளில் இந்தச் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்-என்றார்.(8-5)

# கிளிநொச்சி மாவட்டத்தில் இரு நாள்கள் மோட்டார் திணைக்களத்தின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,நவ.11

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடத்தும் கிளிநொச்சி மாவட்டத்திற்கான நடமாடும் சேவை நாளைமறுதினம் சனிக்கிழமை முதல் இரு தினங்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப்பரீட்சை, செயன்முறைப் பரீட்சை என்பன நடத்தப்படவுள்ளன.

இச் சேவையை நடத்துவதற்காக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான போக்குவரத்துப் பரிசோதகர் ஆர்.ஏ.ரி.குலாஸ் தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி செல்லவுள்ளனர்.

முதல்நாள் சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்த சுமார் 500 பேருக்கு எழுத்துப் பரீட்சை நடத்தப்படும் என்றும் -

மறுநாள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்றும் - அவர்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் விரைவில் நடத்தப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வாகன விபத்துக்களைத் தடுப்பதற்குக் கையாளவேண்டிய நடைமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் கலந்துரையாடல்களைப் போக்குவரத்துப் பரிசோதகர் மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (10-5)

# பிறந்த தினத்தையொட்டி பிரபாவுக்கு நினைவுக் கேடயம்

## யாழ்.பல்கலைக்கழக சமூகம் வழங்குகின்றது

யாழ்ப்பாணம்,நவ.11

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்தநாளையொட்டி யாழ்.பல்கலைக்கழக சமூகம் அவருக்கு நினைவுக்கேடயமொன்றை வழங்கவுள்ளது.

எதிர்வரும்26 ஆம் திகதி தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாடப்படுகின்றது.

இதனையொட்டி யாழ். பல்கலைச்சமூகம் இம்முறை நினைவுக் கேடயம் ஒன்றை தலைவர் வே.பிரபாகரனுக்கு வழங்கவுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் எஸ்.செல்வக்குமாரன் தலைமையில் பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் நினைவுக்கேடயத்தை எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு எடுத்துச்செல்வார்கள். இந்த நினைவுக்கேடயம் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் நடுவப்பணியகத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடாகத் தேசியத் தலைவரிடம் கையளிக்கப்படும்.

இதேவேளை - தலைவரின் பிறந்ததினமாகிய 26ஆம் திகதி காலை 7 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூஜைகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (8-13)

# பாடசாலை அதிபர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை மற்றும் வடமாகாண அதிபர் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படும் அதிபர்களுக்கான வாண்மை விருத்தி தொடர்பான செயலமர்வு நாளைமறுதினம் சனிக்கிழமை முதல் வலய ரீதியாக நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்டவர்களுக்கான செயலமர்வு நாளைமறுதினம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களும் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் -

அதே தினங்களில் தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு வரணி ஆசிரிய வள நிலையத்திலும் -

எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் வலிகாமம் வலயப் பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும் வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்திலும் நடைபெறவுள்ளன.

தீவக வலயப் பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வுக்குரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் -

சம்பந்தப்பட்ட வலயங்களின் பாடசாலை அதிபர்கள் குறிப்பிட்ட திகதிகளில் தவறாது சமுகம் கொடுக்குமாறும் - யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை அறிவித்துள்ளது. (8-5)

### இறுதியாட்டம்

வலி.வடக்கு,நவ.11

கந்தரோடை ஸ்கந்தா விளையாட்டு அபிவிருத்திக் கழகம் நான்காவது ஆண்டாக நடத்தி வரும் நட்சத்திரங்களின் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் அதிபர் க.சிவாஜி தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.செல்லையாவும் கௌரவ விருந்தினராக வடக்கு - கிழக்கு, வடமத்திய மாகாண பிராந்திய முகாமையாளர் எம்.வை.எம். ஹரீஸும், சிறப்பு விருந்தினராக வர்த்தகர் என்.சண்முகவேலும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்றைய ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

இறுதி ஆட்டம்

☆ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

3ஆம் இடத்திற்கான ஆட்டம்

☆ கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. (10-86)




# திருட்டு மற்றும் கலாசாரச் சீரழிவுகளை தடுக்கப் படையினர் நடவடிக்கை

கோண்டாவில்,நவ.11

திருட்டு மற்றும் கலாசாரச் சீரழிவுகளைத தடுப்பதற்குப் பொலீஸாருடன் இணைந்து தாமும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாக கோண்டாவில் டிப்போவுக்கு அருகில் உள்ள இராணுவமுகாம் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கேண்டாவில், உரும்பிராய் ஆகிய பிரதேச பொதுமக்களுடனான கலந்துரையாடல் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை கோண்டாவில் மற்றும் உரும்பிராய பிரதேசத்தில் புனரமைக்கப்படாத வீதி களைப் புரமைபபதற்கும் வீதிகளில் மின்விளக்கு கள் பொருத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமாதான நீதிவான்கள் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர். (10-49)

# தலைவரின் பிறந்த நாளையொட்டி இரத்ததானத்துக்கு ஏற்பாடு

வலி.வடக்கு,நவ.11

தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த நாளையொட்டி யாழ்ப்பாணம் - நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினரால் இரத்ததானம் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தேசிய எழுச்சிப் பேரவையினர் மேற்கொண்டுள்ளனர்

இரத்ததானம் வழங்குபவர்களுக்கு அன்றைய தினம் சத்துணவுப் பொதிகளும் வழங்கப்படவுள்ளன.

இதேநேரம் யாழ்ப்பாணம் - நல்லூர் கோட்டத்திற்கு உட்பட்ட ஊரக எழுச்சிப் பேரவைகளும் தலைவரின் பிறந்தநாளை ஒட்டிப் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளன. (10-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# தீபத்திருநாளில் திடசங்கற்பம்

இன்று தீபாவளித் திருநாள்.

இருளகன்று ஒளி நிறைந்த - நிலைத்த - நன்னாள்.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த இந்துக்கள், இயற்கையின் தத்துவத்தை - அர்த்த பரிமாணத்தை - புரிந்துகொண்டு கொண்டாடும் தினம் இது.

உலகின் மூலமும் முதலும் உதயன். அவன் ஒளிப் பிழம்பானவன். அவனே உலகை இயக்கும் பேராற்றல்.

ஒளி ஒன்றினால்தான் உயிர்கள் பிறக்கின்றன; பிழைக்கின்றன; விழிக்கின்றன; உறைகின்றன; சிறக்கின்றன. அந்த ஒளியைப் போற்றும் திருநாள் இன்று.

அதர்மமாகிய இருள் அகன்று, தர்மமாகிய ஒளிநறைந்த - வியாபித்த - நன்னாளாக இதைக் கருதி இந்துக்கள் கொண்டாடுவர்.

வையகத்தைத் தனது அதர்மப் போக்கினால் வருத்திய நரகாசுரனை கிருஷ்ண பரமாத்மா அழித்து, தர்மத்தை நிலைநாட்டிய இத்தினமே தீபத் திருநாளாகவும் திகழ்கின்றது.

அதர்மத்தை தர்மம் சங்காரம் செய்யும் கர்ண பரம்பரைக் கதைகளும், புராணங்களும் இந்துக்களின் வழிபாட்டு முறைகளில் பலவுள்ளன. விஜயதசமி, தீபாவளி, ஸ்கந்தசஷ்டி என்று அது நீளும். அவற்றுள் ஒன்றே இன்றைய தினம்.

ஈழத் தமிழினமும் இன்று அதர்மத்தின் பிடியில் சிக்கித் தவிக்கிறது. அடிப்படை உரிமைகளை இழந்து, கௌரவமும் நீதியுமான வாழ்வைத் தொலைத்து, சுதந்திரத்தையும் சமத்துவ நியாயத்தையும் பறிகொடுத்து, மூன்றாம தர இனமாக இலங்கையில் பந்தாடப்படுகின்றது தமிழினம்.

வாழ்வியலுக்கான உரிமைக்காகவும் இருப்புக்கான உாமைக்காகவும் தமிழினம் நடத்தும் சுதந்திரப் போராட்டம் - அதர்மத்துக்கு எதிரான நீதியின் போராட்டம் - இன்று தீர்க்கமான ஒரு கட்டத்தை எட்டியிருக்கின்றது.

தமிழினத்தின் உரிமையோடு கூடிய கௌரவமான வாழ்வியலைப் பேரினவாத அசுரன் கபளீகரம் செய்து, ஈழத்தமிழரை வேட்டையாடி, துன்பத்தில் ஆழ்த்தி, அவர்களின் சுதந்திரத்தைப் பறித்து, அடிமைகளாக்கி, கொடுங்கோலாட்சி புரிந்துகொண்டிருக்கிறான்.

அன்றைய மக்கள் நரகாசுரனின் பிடியிலிருந்து விடுதலை கிடைக்காதா என்று ஏங்கித் தவித்ததுபோல், இன்றைய பேரினவாத அரசுகளின் பிடியிலிருந்து விடுதலை கிடைக்காதா என்று ஈழத்தமிழர்கள் ஏங்கித் தவியாய்த் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

அன்றைய கிருஷ்ண பரமாத்மா நரகாசுரனை சம்ஹாரம் செய்ததுபோல, இன்றைய பேரினவாத நரகாசுரனை சம்ஹாரம் செய்வது எப்போது என்பதுதான் ஈழத்தமிழர்களின் மனத்தில் தொக்கி நிற்கும் ஏக்கக் கேள்வி.

அன்றைய நரகாசுரன் பிரமாவின் வரம் பெற்று வந்ததால் வலிமை மிகுந்தவனாக இருந்தான். அந்த வலிமையால் மக்களை வலிக்கு உட்படுத்தினான். அதனால், அவன் அழிய நேரிட்டது.

இன்றும் - இங்கும் - சில நரகாசுரர்கள் வலிமை பெற்று வந்திருக்கின்றார்கள். அதனால் வலி தரும் ஆட்சி நீள்கின்றது; நீடிக்கின்றது.

'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் ஒருநாள் வெல்லும்' - என்ற ஆன்றோர் வாக்குக்கு இணங்க எம்மைச் சூழ்ந்து கவ்வி நிற்கும் அதர்மத்தை வீழ்த்தி, தர்மம் வெல்லும்.

நரகாசுரனை அழிக்கும் நவீன கிருஷ்ண பரமாத்மா களத்தில் யுத்தப் பேரிகை முழங்க, சங்கு ஊதித் தயாராகிவிட்டான்.

அதர்மம் வீழ்வதும், தர்மம் வெல்வதும் உறுதியாகியிருப்பது தென்படுகிறது. மீண்டும் வரும் தர்மத்தை வரவேற்கத் தமிழினம் வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிறது.

அந்த தர்மத்தை வரவேற்கும் தகுதியோடு, தர்ம வழியில் தமிழினம் தயாராக இருக்கின்றதா என்பதுதான் இந்தத் தீபாவளித் திருநாளில் எம்மிடம் நாமே கேட்கவேண்டிய கேள்வியாகும்.

இழந்த உரிமைகளையும், சுதந்திரங்களையும் மீளப் பெறுவதற்காக அளப்பரிய தியாகங்களையும், ஈகையையும் புரிந்த போராளிகளின் தீரத்தினால் தர்மத்தின் வாழ்வைப் பெறும் வாய்ப்பு நமக்குக் கிட்டப்போகின்றது. அந்தப் பெறுமதியான தர்மவாழ்வைப் பெறத்தக்க தூய்மையோடு நமது இன வாழ்வை - சமூகப் போக்கை - நாம் முன்னெடுக்கின்றோமா என்தை நாமே சிந்தித்துப் பார்க்க வேண்டிய தருணம் இது.

சாதி, சமய, கொள்கை - கோட்பாட்டு வேறுபாடுகளை முன்னிறுத்தி, நமது இனத்தைப் பிளவுபடுத்துகின்ற கேவலப் போக்கை நாங்கள் அடியோடு கைவிட்டு, தூய - நீதியான - எல்லோரும் எல்லாமும் பெறுகின்ற - சமூக சமரச சமவுடைமை வாழ்வுக்கு நாங்கள் தயாரா என்பதை உறுதிப்படுத்துகின்ற வேளை இது.

அதை உறுதிப்படுத்த எம்மை நாமே தயார் செய்துவிட்டோம் என்றால், தர்மத்தை வரவேற்கும் தகுதி பெற்றவர்களாகி விடுவோம். அப்படி நம்மைத் தயார்ப்படுத்த இந்தத் தீபத்திருநாளில் திடசங்கற்பம் கொள்வோமாக.

நாம் தீபமேற்றி இவ்வாறு திடசங்கற்பம் எடுக்கவேண்டிய மற்றொரு நாள் இன்னும் பதினைந்து தினங்களில் வரவிருப்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும்.

# இந்திய மீனவரின் ஊடுருவலைத் தடுக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்

## மீன்பிடி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.11

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதனால் பெரிதும் பாதிக்கப்படுவோர் வடபகுதி மீனவர்களே. இந்திய மீனவர்களின் இத்தகைய செயற்பாட்டுக்கு இலங்கை மீன்பிடி அமைச்சு விரைவில் நடவடிக்கை எடுக்கும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை மீன்பிடி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஏ.ஹெட்டியாராய்ச்சி.

கரையோர வளங்களைப் பாதுகாத்துப் பராமரிப்பது தொடர்பாக யாழ்.செயலகத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பட்டறையில் கலந்துகொண்ட வடமாகாண கடற்றொழில் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம், "இந்திய மீனவர்களின் அத்துமீறலால் எமது கடல் வளங்கள் அழிக்கப்படுகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று பணிப்பாளர் நாயகத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிகையிலேயே பணிப்பாளர் நாயகம் மேற்கண்ட தகவலை வெளியிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பிரதேசத்தில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பான உயர்மட்ட மாநாடு ஒன்று அண்மையில் தமிழ்நாட்டில் இடம்பெற்றது. இதில் இலங்கை மீன்பிடி அமைச்சின் உயர் அதிகாரிகளும், இந்திய மத்திய அரசின் மீன்பிடி அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள பெரும்பாலான கடற்றொழிலாளர்களே இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடிக்கும் உபாயத்தைத் தமது மீனவர்களுக்குக் கற்றுக்கொடுத்ததாகத் தெரிவித்தனர்.

தமது பகுதியில் மீன்வளங்கள் குறைவாக உள்ளதனால் இலங்கைக் கடற்பரப்பில் சென்று மீன்பிடிப்பதற்கு அனுமதியைப் பெற்றுத்தருமாறு இந்திய மீனவர்கள் கோரிவருகின்றனர் என்றும், அத்துடன் இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட 92 இந்திய மீன்பிடிப் படகுகள் பராமரிப்பின்றிச் சேதமடைந்து வருவதால் அவற்றிற்குரிய இழப்பீட்டை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் - இந்திய உயரதிகாரிகள் எம்மிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இவற்றை நாம் நிராகரித்தோம். எது எவ்வாறு இருப்பினும் இந்திய மீனவர்களின் அத்துமீறும் செயற்பாட்டினால் இலங்கை மீனவர்கள், குறிப்பாக வடபகுதி மீனவர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் இந்திய மீனவர்களின் இந்தச் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டோம் - என்றார். (10-5)

# நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள் கல்விநிலையை மதிப்பிடுவதற்குக் கூடுகின்றனர்

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ். மாவட்டத்தின் கல்வி நிலை தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், 5 வலயங்களைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

யாழ். வலயத்தைச் சேர்ந்தவர்களை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும், வடமராட்சி வலயத்தைச் சேர்ந்தவர்களை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், வலிகாமம் வலயத்தைச் சேர்ந்தவர்களை நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் -

தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்தவர்களை நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு வரணி மத்திய மகா வித்தியாலயத்திலும் தீவக வலயத்தைச் சேர்ந்தவர்களை எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திலும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது யாழ். மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி, பாடசாலைகளின் பௌதிகத் தேவைகள், குறைபாடுகள், மாணவ, ஆசிரியர் பிரச்சினைகள், நிதி ஒதுக்கீடு போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார். (10-5-202)

# வடக்கின் 5 மாவட்டங்களிலும் பொது விழிப்புணர்வு வாரம்

நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் (றீடோ) கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் பொதுவிழிப்புணர்வு வாரம் ஒன்றை அனுஷ்டித்து வருகின்றது. எதிர்வரும் 14 ஆம் திகதிவரை இது அனுஷ்டிக்கப்படும். இந்த விழிப்புணர்வு வாரம் வடமாகாணத்திலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களில் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு 'றீடோ' நிறுவனத்தின் பதாதைகளைக் கட்டி பாடசாலைகளில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்திவருகின்றனர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறைகொள்ள வேண்டும், இளம் சந்ததியினர் தேடல் மூலம் தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும், மது அருந்துவது மனிதனைச் சீரழிக்கும் ஓர் அபாயச் செயல், இளைஞர், யுவதிகள் கட்டாயம் ஏற்ற தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல் அவசியம் ஆகிய வாசகங்களை மையப்படுத்தியே இந்த விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

விழிப்புணர்வு வாரத்தின் நோக்கம் சமுதாயத்தில் இளைஞர், யுவதிகள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகிய பல தரப்பினரையும் போரினால் ஏற்பட்ட தாக்கங்களிலிருந்து விடுவித்து ஒரு வளமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே என்று 'றீடோ' நிறுவனத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் தி.ஜெயக்குமார் தெரிவித்தார்.(ஐ)

# உயர்பட்டக் கற்கைநெறி மாணவர்களுக்குக் கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தினால் உயர்பட்டக் கற்கைநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கென ஒழுங்குசெய்யப்பட்டுள்ள ஆய்வு முறையியல் மற்றும் அதனுடன் இணைந்த பயிற்சிப்பட்டறை ஆகியவற்றுக்கான கருத்தரங்குத் தொடர்களின் முதல் தொடர் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 3 தினங்களுக்கு பல்கலைக்கழக பொருளியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பட்டறையை யாழ். பல்கலைக்கழகத் துறைசார் வல்லுநர்கள் நடத்தவுள்ளனர். பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் உயர்மட்டக் கற்கைநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்கள் அனைவரையும் இக்கருத்தரங்குத் தொடரில் தவறாது கலந்துகொள்ளுமாறு உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கேட்டுள்ளார். (10-202)

## குருநகர் புனித யாகப்பர் ஆலயம்மீது

# விமானக் குண்டுவீச்சு இடம்பெற்ற 11ஆவது ஆண்டு நினைவுதினம்

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது விமான்க்குண்டு வீச்சு இடம்பெற்ற 11ஆவது ஆண்டு நினைவு தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இவ்விமானக் குண்டுவீச்சின்போது இவ்வாலயம் சேதமடைந்ததுடன் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பக்தர்களில் 9பேர் இறந்ததுடன் 15பேர் காயமடைந்தனர்.

இவர்களின் நினைவாக நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் ஆலயப் பங்குத்தந்தை வண.பிதா ஆர். எச்.சகாயநாயகம் அடிகளாரால் நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (10-51)

## மீட்புநிதி மீளளிப்பு பெயர்ப் பட்டியல்

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புச் செய்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இன்றைய உதயனில் இடம்பெறவில்லை. தொடர்ந்து நாளைமுதல் பெயர்ப்பட்டியல் வெளிவரும். (ஆ-ர்)

## உதயவாக்கு


வாழ்க்கை என்னும் புத்தகத்தில் காதல் என்பது ஒரு பக்கம் தான்.

## நாளை

ஐப்பசி 27
வெள்ளிக்கிழமை
(12.11.2004)
திதி: அமாவாசை
முன்னிரவு 08.40 வரை.
நட்சத்திரம் : சுவாதி
முற்பகல் 09.33
அமாவாசை விரதம்
கேதார -கௌரி விரதம் முடிவு
சுபநேரம்: 06.07. - 7.37
ராகுகாலம்: 10.32 - 12.07
(பகல் நேரம்)

# சாயி சிந்தனை

## உருவங்கள் மாறலாம்



உருவங்கள் மாறியிருக்கலாம்! பெயாகள் வெவ்வேறாக இருக்கலாம்! பேசும் மொழிகூட வேறாக இருக்கலாம்! ஆனால், இவை அனைத்தையும் தூண்டி இயக்குவது இறைவன் மட்டுமே என அறிந்துகொள்ளுங்கள். எல்லாம் இறைவனின் அம்சங்கள்தான் என்பதும் உணரப்படவேண்டும்! இறைவனே அறிவித்திருக்கிறார், எல்லாம் அவரது தெய்வீக வடிவங்களே என்று. ஆனால், இறைவன் பிரேமை ஸ்வரூபம். அன்புதான் அவரது தத்துவம். அந்த அன்பே இந்த பிரபஞ்சம் முழுவதும் பரவியிருக்கிறது. எல்லோரிடமும் உறைவது அந்தத் தெய்வீக அன்பு மட்டுமே! இறைவன் எப்படித் தன் அன்பை அனைவரிடமும் வெளிப்படுத்துகிறாரோ, அப்படியே ஒவ்வொரு மனிதனும் தன் அன்பை மற்றவருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்! அன்பை இப்படித்தான் என்று வரையறுத்துக்கூற முடியாது! மனிதனுடைய பரந்த அறிவாலோ, பணத்தாலோ அன்றி வேறெதாலோ அன்பை அளவிட்டுக்கூற முடியாது. பிரகாசமாக விளங்கும் சூரியனை, அதன் பிரகாசத்தாலேயேதான் காணமுடியும்! அதேபோல அன்பின் முழுமையான வடிவமான இறைவனையும் அதே அன்பின் மூலமாகத்தான் உணர்ந்துகொள்ளமுடியும்.

இந்த அன்பைவிட விலையுயர்ந்தது உலகில் வேறெதுவும் கிடையாது.

ஆதாரம்:சனாதன சாரதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 ஆம் ஆண்டு நினைவில்...



## லெப்.கேணல் குணா
-சுந்தரம் விஜயராசா-
(தென்மராட்சி சிறப்புத் தளபதி)

(C/38964)


தவளைப்பாய்ச்சலின் முதல் களப்பலியானீர் – எம் தேசம் போற்றும்
தலைவன் வழி வந்தீர் திரண்ட எதிரிமுன் புயலெனப்பாய்ந்தீர்!
மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்திட்ட குணாவே!
உன் பெயரோடு விரைவில் எம் தேசம் விடியும்.

தமிழீழ விளையாட்டுத்துறை,
சாவகச்சேரி, கைதடி
நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11ஆம் ஆண்டு நிறைவு நினைவுகளில்...

தாயின் மடியில் 31 - 05 - 1965



தாயக மண்ணில் 11 - 11 - 1993

## லெப்.கேணல் சூட் / அருணன்

### (நவரட்ணம் விக்னராஜன்)

**தவளைத் தாக்குதலில், பூநகரிப் போர்தனிலே புதுவீரம் காட்டிய மறவர்கள் நினைவோடு....**

உன் சிறிய விழிகள் இன்னும் மாறவில்லை
எங்கள் விழிகளில்........!
உன்னைச் சிறியவன் என்று நாம் நினைக்க
உன் பெரிய பணி முடித்து - நீ
பெரியவனாகிவிட்டாய் ....!
உன் இனிய வதனமும்
உன் சிம்மக் குரலும் எங்களுள்
ஊன்று கோலாய் எம்மை
நிமிர வைக்கின்றன.....!

**தவளைத் தாக்குதலில் இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இன்று நாம் நினைவு கொள் கின்றோம்.**

**என்றும் உன் நினைவுகளுடன்:**
**அப்பா, அம்மா, அத்தான்,**
**தங்கை - நந்தா, தம்பி - விஜி.**
**மருமக்கள் - எழில்நிலா,**
**அருண்நிலா.**
**மாவீரர்கள், போராளிகள்.**

**49, நாயன்மார்கட்டு,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**
(சி-38937)(14-18-33)

## ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான கலந்துரையாடல்

வலி.தெற்கு,நவ.11

கல்வி வலயங்களுக்கிடையிலானதும், வலயத்துக்குட்பட்டதுமான அடுத்தவருடத்துக்குரிய ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான ஆசிரியர் இடமாற்ற சபையின் கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வலிகாமம் கல்விவலய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (8-152)

## விதை உருளைக்கிழங்கு பெற்றுக்கொள்ளலாம்

வலி.தெற்கு,நவ.11

விவசாயிகளுக்குத் தேவையான சிபார்சு செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கினை நீர்வேலியில் உள்ள பவானி களஞ்சியத்திலும், சுன்னாகத்தில் உள்ள கமக்காரா மாளிகையிலும் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் விதை உருளைக்கிழங்கைப் பெற்றுத்தருமாறு கமநலசேவை நிலையங்களிடம் கேட்டிருந்த போதிலும் இம்முறை கமநல சேவை நிலையங்களூடாக விதை உருளைக் கிழங்குகள் விநியோகிக்கப்படமாட்டாதெனவும்-

சிபார்சு செய்யப்பட்ட மேற்படி விவசாய நிறுனங்கள் மூலமே அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-152)

## வங்கி உதவியாளர் பயிலுநர் பதவிக்கான போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.11

மக்கள் வங்கிக் கிளைகளில் வங்கி உதவியாளர் பயிலுநர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கிக் கிளைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு வங்கி உதவியாளர் பயிலுநர்களுக்கான விண்ணப்பங்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் கோரப்பட்டிருந்தன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவை கிடைக்கப்பெறாதவர்கள் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதனை உறுதிப்படுத்தி அனுப்பிய கடிதத்துடன் . பரீட்சைக்குத்தோற்றமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-5)

## 4ஆம் ஆண்டின் நினைவில்...

வாழ்வுக்காக 08 - 01 - 1960



ஓய்வுக்காக 25 - 10 - 2000

### அமரர் கந்தப்பு தவராசா (பவா)

திதி: 11.11.2004

உந்தன் நினைவுகளால் எந்த நாளும்
வெந்து நொந்து தவிக்கின்றோம் - நாம் ஆற
வந்து ஒருதரம் பார்க்காயோ அப்பா?
சந்தை சந்தடிகள் கூறும் உங்கள் நாமம்
எந்தநாளும் ஓங்கி ஒலிக்குதே!
எந்தையே வந்தேவிடுங்கள் எம்மிடம்!

*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.* (38473)(14-18-33)

நினைவுத்துயரில்:
மனைவி, பிள்ளைகள்.

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 – 07 – 1930



உதிர்வு 02 – 11 – 1994

### அமரர் வயிரமுத்து அப்புத்துரை

**(இளைப்பாறிய சாரதி, இ.போ.ச.)**

எம் இதயம் நிறைந்த அப்பாவே!
ஆண்டுகள் பத்துக் கடந்தாலும்
ஆறாது எம் துயரம்!

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளை.

உடுவில். (38447)(14-18-33)

# 5 ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்



தாயின் மடியில் 11-06-1974

தாயக விடிவில் 11-11-1999

வானும் கடலும் நிலவும் நிலமும்
மௌனித்துப் போனதென்ன?
மௌனத்துயர் சுமந்து நம் இதயம்
விம்மித் துடிப்பதென்ன?
துடிப்போடு தலைவனின் நெறி நின்று
விண்ணைக் காத்ததென்ன?
ஈழத்தின் விடுதலைத் தீபத்தை - உன்
கையில் ஏற்ற மறுப்பதென்ன?
நண்பா!

## மேஜர் கமலன்

### (தெய்வேந்திரம் விஜயரூபன்)

உன் நினைவுகளுடன்: **நண்பன்.**
**சாவகச்சேரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்மோனிய வித்துவான் அமரர் சாமுவேல் சுப்பையா ஞாபகார்த்த மண்டபம் கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தமிழீழக் கல்விக் கழகத் துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்டர் மங்கள விளக்கு ஏற்றுவதையும், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் மண்டபப் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்வதையும், கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் மண்டபத்தை நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும், அமரர் சாமுவேல் சுப்பையாவின் உருவப்படத்துக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் மலர்மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: வட்டக்கச்சி செய்தியாளர்)*

# பூநகரி வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் இல்லை

## சிரமங்களை அனுபவிக்கிறார்கள் நோயாளர்கள்

பூநகரி,நவ.11

பூநகரி வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படாமையால், நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வைத்தியசாலை 1991 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட வலம்புரி இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து முழங்காவிலில் இயங்கிவந்தது. பின்னர் கடந்த வருடமே பூநகரியில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இவ்வைத்தியசாலையில் இதுவரை நிரந்தர வைத்தியர் எவரும் நியமிக்கப்படவில்லை. வெளியிடத்திலிருந்து வரும் வைத்தியராலேயே வைத்திய சேவைகள் வழங்கப்படுகின்றன.

தினமும் 150 நோயாளர்கள் இவ்வைத்தியசாலையில் பயன்பெறுகின்றனர். எனினும் நீண்டநேரம் காத்திருந்து சிகிச்சை பெறவேண்டிய நிலையுள்ளது. சில சமயங்களில் அவசர சிகிச்சைகள் பெறவேண்டியவர்கள் உரிய நேரத்தில் பெறமுடியாது மரணங்களை எதிர் கொள்கின்றனர்.

இதனால், சம்பந்தப்பட்ட தரப்பினர் நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமித்து நோயாளர்கள் உரியநேரத்தில் சிகிச்சைபெற ஆவனசெய்ய வேண்டுமென இப்பிரதேச மக்கள் எதிர்பார்க்கின்றனர். (8-204-403)

## சிறுவர்கள் நடத்திய கண்காட்சி

விசுவமடு,நவ.11

விசுவமடு இளங்கோபுரத்தில் இயங்கும் சோழர் சிறுவர் பகல் பராமரிப்புப் பூங்கா சிறுவர்களின் கண்காட்சி நிகழ்வு கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது.

பொ.மாடசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்களவிளக்கினை தேராவில் தமிழ்வித்தியாலய அதிபர் எஸ்.விக்னேஸ்வரமூர்த்தியும், பாரதி வித்தியாலய ஆசிரியை ஜெரமணியும் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை விசவமடு பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் பு.திலகனும், பாடசாலைக் கொடியினை சோழர் பூங்கா ஆசிரியை அ.இசைஞானவதியும் ஏற்றிவைத்தனர்.

கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (8-402)

# பூநகரித் தபால் நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் இல்லை

பூநகரி, நவ.11

பூநகரி தபால் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடமின்றி பல்வேறு சிரமத்தின் மத்தியில் இயங்கி வருகிறது.

வாடியடியிலுள்ள தனியார்வீட்டில் இயங்கி வந்த இத்தபாலகம் கடந்தவருடம் முதல் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள இவ் அஞ்சலகத்தில் மழைகாலத்தில் பல அசௌகரியங்களைச் சந்திக்கவேண்டியுள்ளது.

பூநகரிப் பிரதேசத்தில் பல அரச அலுவலகங்களுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப் பட்டு வருகிறது.

ஆனால், பூநகரித் தபாலகத்திற்கு எவ்வித கட்டட வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லையென தபாலக வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (8-204-403)

# வலைப்பாடு நாகமுனைப் பாலம் சேதம்; வீடுகளுக்குள் வெள்ளம் புகும்நிலை!

பூநகரி,நவ.11

வலைப்பாடு நாகமுனைப்பாலம் சீரமைக்காமையால், மழைநீர் சீராகப் பாயமுடியாத நிலை தோன்றியுள்ளது. இதனால் வலைப்பாடு கிராம வீடுகள் முழுவதும் நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பாலம் உரியமுறையில் தூர்வை அகறறாததால், மண்மேடுகள் ஏற்பட்டு, வெள்ள நீர் ஓடமுடியாது நீர்தேங்கி நிற்கிறது.

வீதிகளில் தேங்கி நிற்கும் வெள்ளம் காரணமாக பொதுமக்கள் போக்குவரத்தில் பல இடையூறுகளைச் சந்திப்பதாகவும் கால் நடைகளின் மேய்ச்சல் தரவை நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பாலத்தை மிகவிரைவில் தூர்வை எடுத்துச் சீரமைப்பதோடு, நீர் ஓடுவதற்கு மேலதிக நீர்ப்போக்கிகளையும் அமைக்குமாறு இப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-204-403)

# புதுக்குடியிருப்பில் காவல்துறையின் வீதி ஒழுங்குக் கண்காணிப்பு தீவிரம்

புதுக்குடியிருப்பு,நவ.11

கடந்த சில நாள்களாக தமிழீழ காவல் துறையினர் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வீதி ஒழுங்குகளைக் கண்காணிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பல்வேறு தரப்பினருக்கு வீதிப் போக்குவரத்து நடைமுறைகள், விளக்கங்கள் ஏற்கனவே பலமுறை எடுத்துக் கூறியும் விபத்துக்கள் ஏற்படுவதையடுத்து வேகக் கட்டுப்பாடு மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

வீதி சமிக்ஞைகளை மீறுவோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வீதிச் சமிக்ஞைகள் பொருத்தப்படாத இடங்களில் வீதிச் சமிக்ஞை குறியீடுகள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றினை நடைமுறைப்படுத்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஆகியன ஒத்துழைப்பை வழங்கியுள்ளன. (8-353)

# வட்டக்கச்சி பிரதான வீதி சேதமடைந்த நிலையில்

வட்டக்கச்சி,நவ.11

கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் வட்டக்கச்சி பிரதான வீதி மக்கள் போக்குவரத்துச்செய்ய முடியாத அளவுக்குச் சேதமடைந்துள்ளது. கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சிக்குச் செல்லும் பிரதான வீதியே இவ்வாறு சேதமடைந்துள்ளது.

தற்போது தொடர்ந்து பெய்துவரும் மழையினால் பரந்தன் - முல்லைத்தீவுப் போக்குவரத்துக்குத் தடைப்பட்டுள்ள நிலையில் வட்டக்கச்சி வீதியூடாகவே புதுக்குடியிருப்புக்கான போக்குவரத்தும் நடைபெறுகின்றது. இந்த நிலையில் இவ்வீதி குண்டும்குழியுமாகக் காணப்படுவதால் மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலைஏற்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர், அதிக அக்கறை செலுத்தி வீதிப்புனரமைப்பில் கவனம்செலுத்த வேண்டும் - என பொதுமக்கள் கோருகின்றனர். (8-405)




# வெலிகண்டல் பாலத்தின் தற்காலிக பாதை சேதம்

வட்டக்கச்சி,நவ.11

பரந்தன், முல்லைத்தீவு வீதியில் உள்ள கண்டாவளை வெலிகண்டல் பாலத்தில் திருத்த வேலைகள் செய்யப்பட்டு வருவதனால் அதற்காக தற்காலிகமாகப் போடப்பட்டிருந்த தற்காலிக வீதி மழைநீரில் அரிக்கப்பட்டிருக்கின்றது.

இதனால், அப்பாதையில் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. தற்போது வட்டக்கச்சி ஊடாகவே அனைத்து போக்குவரத்துகளும் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், ஏற்கனவே, குண்டும் குழியுமாக காணப்பட்ட வட்டக்கச்சி பிரதான வீதி தொடர்வாகனப் போக்குவரத்தால் மேலும் சேதமடைந்து வருகின்றது.

அத்துடன், மழைவெள்ளம் வீதியில் உள்ள குழிகளில் தேங்கி நிற்பதினால், அவ் வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்திலெடுத்து இவ்வீதியினைப் புனரமைக்கும் பணி நடவடிக்கைகளினை எடுக்குமாறு - அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (4-405-203)

## ஐ.நா.சபைத்தினம் கிளிநொச்சியில் அனுஷ்டிப்பு

திருவையாறு,நவ.11

ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்ட தினம் கடந்த 24 ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் வளாகத்தில் நடைபெற்றது. ஐ.நா. கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமானது.

சிறப்பு நிகழ்வுகளாக கலாசார மண்டபத்தில் புத்தகக்கண்காட்சி ஒன்றும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தோற்றம், செயற்பாடுகளுடன் இணைந்த புத்தகங்களும், புகைப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

ஐ.நா. தொடர்பான விவரணக் காட்சியும் காண்பிக்கப்பட்டது அரச, அரசசார்பற்ற அமைப்புக்களைச் சார்ந்த பலர் பங்குபற்றினர். (8-393)

SHARP
be sharp
கொண்டாட்டம்... கொண்டாட்டம்...
பிறவுண்ஸ் வழங்கும் நம்பமுடியாத கொடுப்பனவுகள் விரையுங்கள்...
ஜப்பானியத் தொழில்நுட்பத்துடன் கூடிய Sharp T.V.5 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குப் பிந்திய சேவையில்...
14D25 20295 16775
20D25 30525 25000
21EFGIA 38995 32956
இன்னும் பல கொடுப்பனவுகள்.....
BROWNS GROUP BG ESTD 1875
பிறவுண்ஸ்
இல.89, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-222 5150.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகள்

## தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கியது

யாழ்ப்பாணம்,நவ.11

மழை வெள்ளத்தினால் பாதிப்புற்ற காக்கை தீவு மற்றும் வசந்தபுரம் பகுதி மக்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்று இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளது.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட காக்கைதீவு மற்றும் வசந்தபுரம் பகுதி மக்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். அலுவலகததில் உடனடி மனிதாபிமான உதவித்திட்டத்தின்கீழ் இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மழை வெள்ளத்தினால் அதிக பாதிப்புக்குள்ளான காக்கைதீவுப்பகுதியைச் சேர்ந்த 25 குடும்பங்களுக்கும், வசந்தபுரத்தைச் சேர்நத 63 குடும்பங்களுக்கும் அரிசி, பருப்பு, சீனி, தேயிலை, மீன் ரின், பால்மா மற்றும் நுளம்பு வலைகள் என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் உட்படத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டனர். (8-7)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுக்கான அனுமதிப் பரீட்சைகள் சனியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ். பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதி நேரம் / முழு நேரம்), கல்வியியல் முதுமாணி ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதிப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்குப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா விண்ணப்பதாரிகளுக்கும், எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்குக் கல்வியியல் முதுமாணி விண்ணப்பதாரிகளுக்கும் அனுமதிப் பரீட்சைகள் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபாலில் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் பட்டப்பின் படிப்புகள் பீடத்துடன் தொடர்புகொள்ளுமாறும் உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்துள்ளார். (8-202)

## புதிய கடன் திட்டம் ஒன்றை மக்கள் வங்கி அறிமுகம் செய்தது

யாழ்ப்பாணம்,நவ.11

மக்கள் வங்கி நுண், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக மக்கள் துரிதக் கடன் என்ற புதிய கடன் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

மக்களின் துரிதக் கடன் திட்டமானது நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான பணத்தை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு வழிசமைக்கின்றது.

கால்நடை வளர்ப்பு, வணிகம் மற்றும் சில்லறை வியாபாரம், விவசாயம், கைத்தொழில் முயற்சிகள், சுயதொழில் முயற்சிகள் மற்றும் பல்வேறுவிதமான தொழில் முயற்சிகளுக்கும் இதன் மூலம் தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

18 வயதிற்கும் 55 வயதிற்கும் இடைப்பட்ட மக்கள் வங்கிக் கிளையின் அதிகார எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினைக் கொண்டவர்களும் தாம் மேற்கொள்ளும் தொழில் முயற்சியின்மூலம். கிடைக்கக்கூடிய இலாபத்தினைக் கொண்டு கடனையும், வட்டியையும் மீளச் செலுத்தக்கூடியவர்களும், முன் பெற்ற கடன்களை ஒழுங்காகச் செலுத்தி முடித்தவர்களும் இக்கடன் திட்டத்திற்கு விண்ணப்பிக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (8-5)

## கொல்களம் இடமாற்றம்

கரவெட்டி,நவ.11

கரவெட்டி, துன்னாலை வேருண்டி மயானத்தில் உள்ள கொல்களம் இடமாற்றப்பட்டுள்ளது.

ஆலயங்கள், பாடசாலை, மயானம் ஆகியவை இக்கொல்களச் சூழலில் அமைந்துள்ளதால் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் கொடுத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இக்கொல்களம் மாற்றப்பட்டுள்ளதாகக் கரவெட்டிப் பிரதேச செயலாளர் சி. சத்தியதாசன் தெரிவித்தார்.

(8-70-202)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,நவ.11

அல்வை நக்கீரன் சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டு விழாவும் இன்று வியாழக்கிழமை நிலையத் தலைவர் பா.பிரசாத் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், கி. சிவனேசன், வடமராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

(10-202-204)

## பொதுத் தேர்வு

வலி.தெற்கு,நவ.11

தமிழீழக் கல்வி மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடத்தப்படவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பொதுத் தேர்வு யாழ். மாவட்டத்தில் நாளைவெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இப்பரீட்சை இம்மாதம் 23ஆம் திகதிவரை பாடசாலைகளில் நடைபெறும். (10-152)


**SPOKEN ENGLISH**

By: **A.BRITTO**

**புதிய பிரிவு**

ஆரம்பம்: 13.11.2004 சனிக்கிழமை
நேரம் : காலை 10.30 (பு.நே.)
இடம் : கொக்குவில் (ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்)
வகுப்புக்கள்: சனி, ஞாயிறு.

(C/35830)(42-13-19-24)


## முன்பள்ளி ஆசிரியர்களின் கூட்டம் 19ஆம் திகதி

கோண்டாவில்,நவ.11

நல்லூர்ப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முத்திரைச் சந்தியில் உள்ள முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி மற்றும் பெற்றோர் விழிப்புணர்வு சம்பந்தமான விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் இப்பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களைத் தவறாது சமுகம்தரும்படி முன்பள்ளி இணைப்பாளர் கேட்டுள்ளார். (10-49)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 628 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 09-11-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 4082259-4099099 | |

வெற்றி இலக்கங்கள்

**04 43 44 51**

லக்கினம் கன்னி

ஜக்பொட் பரிசு ரூபா.34,06,050/- வெல்லப்பட்டுள்ளது

இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,68,911 | 10/- | 3,689,110/- |
| 2.இலக்கங்கள் | 33,854 | 20/- | 677,080/- |
| 1.இல + லக்கினம் | 33,399 | 30/- | 1,001,970/- |
| 2.இல + லக்கினம் | 3,114 | 100/- | 311,400/- |
| 3.இல்க்கங்கள் | 891 | 500/- | 445,500/- |
| 3.இல + லக்கினம் | 93 | 5,000/- | 465,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 400,000/- |
| 4.இல + லக்கினம் | 01 | 34,06,050/- | 3,406,050/- |
| மொத்தம் | 4,40,272 | - | 1,15,26,360/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 1,15,26,360/-

தொடர் இல. 5064334 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 நொவம்பர் 12ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4093779-2-23
4096094-0-17
4090808-7-96
4086578-0-19
4086300-1-71




தித்திக்கும் தீபாவளித் திருநாளில் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்!

**AMAL DENTAL & OPTICALS WORKS**

புதிதாக, முதன்முறையாக உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றார்கள்!
பிறேம் அற்ற (RIM LESS) கண்ணாடிகளையும் சண் கிளாஸ் வகைகளையும் கிளிநொச்சியில் இப்பொழுது கொழும்பு விலைக்கே பெற்றுக்கொள்ளலாம்!

இத்துடன்-

- பல் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும்-
- வசீகரமான சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்-
- மிதப்புப் பற்களுக்கு இலகுமுறையில் கிளிப்போட்டு சீர்செய்து கொள்ளவும்-
- மாபிள் கண்களைப் பெற்றுக்கொள்ளவும்-



நீங்கள் நாட வேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்:

கிளை: பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

**AMAL DENTAL & OPTICALS WORKS**
A9 வீதி, கிளிநொச்சி. ☎ 2285748


## சாயி சமித்தியில் உலக அகண்ட பஜனை

யாழ்ப்பாணம்,நவ.11

திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தியில் உலக அகண்ட பஜனை நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பஜனை மறுநாள் மாலை 6 மணிவரை தொடர்ந்து இடம்பெறும். (ஐ)

## யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம்,நவ.11

நல்லூர் திவ்ய ஜீவன,சங்க மண்டபத்தில் யோகாசன வகுப்புகள் வெள்ளி, சனி தவிர்நத நாள்களில் நடத்தப்படுகின்றன.

ஆண், பெண் இருபாலாரும் இந்த வகுப்புகளில் கலந்துகொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதாரத் தொண்டர்களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 21 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்துப் பிரிவு சுகாதாரத் தொண்டர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்கம் கேட்டுள்ளது. (10-204)

## சைக்கிளைப் பெற்றுக்கொள்ளவும்

யாழ்ப்பாணம்,நவ.11


நல்லூர் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவின்போது கைவிடப்பட்டசைக்கிள் ஒன்று நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையத்திலுள்ளது,

உற்சவ காலத்தில் இந்நிலையத்தால் நடத்தப்பட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப்பட்ட சைக்கிள் ஒன்றே இவ்வாறு உள்ளது.

எனவே, உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி நல்லூர், அரசடி வீதியிலுள்ள மேற்படி சனசமூக நிலையத்தில் சைக்கிளைப் பெற்றுக்கொள்ளுமாறு அதன் தலைவர் இ. ரவீந்திரன் கேட்டுள்ளார். (10-202)

### யாழிற்காய் விழுதெறிந்து நின்ற வீரனின்

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



**கப்டன் பருதியப்பன் (செல்லப்பா சிவகுமார்)**

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 17-04-1974 | 11-11-2001 |

எங்கள் ஆருயிர் மகனே!
எம்மை எல்லாம் தவிக்கவிட்டு
எங்கண்ணா சென்றீர்கள்?
தொண்ணூற்று நான்கில் எமை
விட்டுப் பிரிந்த நீங்கள்
இரண்டாயிரத் தொன்றில் இந்த
உலகை விட்டே பிரிந்ததேனோ?
மாவீரர் வரிசையில் உன்
நாமம் பொறித்திடக் கண்டோம்!
ஆனாலும்........!
ஆறாத உன் நினைவை
ஆற்றிட வழி கண்டிலோம்!

இந்நாளில் இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட **லெப்.கேணல் சிவனேசன், கப்டன் தூயோன், கப்டன் ரூபன்** ஆகியோரையும் நினைவு கூருகின்றோம்.

என்றும் அழியாநினைவுகளுடன்:
பலாலி கிழக்கு, பலாலி. (38441) (34-19-15-24) - **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டக் கல்லூரியின் திறப்புவிழாக் காட்சிகள்...








# கொக்குவில் இந்து மாடிக் கட்டடம் நேற்று வைபவ ரீதியாகத் திறப்பு!

கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதியதாக நிர்மணிக்கப்பட்ட மாணிக்கம் பாக்கியம் ஞாபகார்த்த நூற்றாண்டு மண்டபத்தின் கட்டடம் நேற்று மாலை திறந்துவைக்கப்பட்டது.

முன்னதாக கல்லூரிக்கு அருகிலுள்ள கிருபாகர சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட வழிபாடுகளையடுத்து விருந்தினர்கள், மாணவிகளின் அணிவகுப்புடன் ஊர்வலமாக கட்டடப் பகுதிக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மாணிக்கம் - பாக்கியம் ஞாபகார்த்த நூற்றாண்டு மண்டபத்தினை மாணிக்கம் சுப்பிரமணியமும் -

சுப்பிரமணியம் மண்டபத்தினை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் நாடா வெட்டித் திறந்துவைத்தனர்.

மங்கள விளக்கினை மாணிக்கம் சுப்பிரமணியம், திருமதி சுப்பிரமணியம் மாலா, யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவரும் நிறைவேற்றுப் பொறியியலாளருமான தெய்வசித்தன் இ.நடராசா, பொறியியலாளர் சி.சிவபாலன், பாடசாலை அதிபர் பொ.கமலநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வாழ்த்துரைகளை கல்லூரியின் முன்னாள் அதிபர்களான அ.பஞ்சலிங்கம், இ.மகேந்திரன் மற்றும் கல்லூரியின் தற்போதைய அதிபர் பொ. கமலநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.(எ-7-86)

## ஸ்கந்தாவின் 110ஆவது ஆண்டுவிழா நிகழ்வுகள்

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 110 ஆவது ஆண்டுவிழா எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது. டாக்டர் பி.எஸ்.சுப்பிரமணியத்தின் உருவச்சிலை முதல்நாள் விழாவில் திறந்துவைக்கப்படும். இரண்டாம் நாள் பரிசளிப்பு, நிறுவுநர் நினைவு நிகழ்வுகள் நடைபெறும்.

(எ)

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் சிவபாதசுந்தரம்

(ஊழியர், பூரணி நகைமாடம், யாழ்ப்பாணம்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சிவபாதசுந்தரம் அவர்கள் நேற்று (10.11.2004) புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2004) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அப்பையா லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
(சி-38983)(38-11-18-29)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
அனைவருக்கும் நாகம்ஸின் தீபாவளி வாழ்த்துக்கள். தீபாவளி வெளியீடாக இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக R.B. சௌத்திரியின் தயாரிப்பில் சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த
டொல்பி ஒலி அமைப்புடன்
சத்ரபதி
ரிக்கெற் முற்பதிவுகள் யாழ். வயின்ற் கூடின். கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம். நாகம்ஸ் சினிமா.
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)



நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது.
அனைவருக்கும் நாதன்ஸின் தீபாவளி வாழ்த்துக்கள்
இன்றுமுதல் தனுஷ், வுஸ்லி, பிரியா நடித்த ட்றீம்ஸ் (ரீல்ஸ)
காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30
(சி-38673)

ராஜா யாழ்ப்பாணம்
அனைவருக்கும் ராஜாவின் தீபாவளி வாழ்த்துக்கள்
இன்று முதல் அஜித், பூஜா நடித்த அட்டகாசம் (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30.
(சி-38750)
ரிக்கெட் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

நிரஞ்சனாஸ் சங்கானை
ரசிகப் பெருமக்களுக்கு தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்
ரவிகிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த 7/G ரெயின்போ காலனி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
விசேட காட்சி இரவு 9.00 (பு.நே)
கேம்பஸ்

## காங்கேசன்துறையில் கரையொதுங்கிய சடலம்

யாழ்ப்பாணம்,நவ.11

ஊதிப்பெருத்த நிலையில் ஆண் ஒருவரது சடலம் நேற்று காங்கேசன்துறையில் கரையொதுங்கியது.

இது விடயமாக காங்கேசன்துறைப் பொலீஸார் நேற்றிரவு மல்லாகம் நீதிவானுக்கு தெரியப்படுத்தினர்.

இன்று காலை சம்பவ இடத்திற்குச் செல்லும் மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் மரண விசாரணையை மேற்கொள்வார்.

(எ)

## இணுவிலில் இன்று சிறுவர் பூங்கா திறப்பு

யாழ்ப்பாணம், நவ.11

இணுவில் பொது நூலகத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா இன்று தீபாவளி தினத்தன்று திறந்து வைக்கப்படுகின்றது.

இந்தப் பூங்காவில் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்ட நவீன விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

சிறுவர்கள் பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை இந்தப் பூங்காவைப் பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டது. (எ-6)

## தலைவர் பிரபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பாலா சனிக்கிழமை லண்டன் திரும்புவார்

இன்றைய சந்திப்புக்காக லண்டனில் இருந்து நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு வருகைதந்த புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும அவரது துணைவியாரும் உடனடியாகவே லண்டன் திரும்பவுள்ளனர்.

பாலசிங்கம் தம்பதியர் ஒருவார காலம் வன்னியில் தங்கியிருப்பர் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், தற்போதைய காலநிலைமையைக் கருத்திற் கொண்டு பாலசிங்கம் நாளைமறுதினமே லண்டன் திரும்புகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## சிறுவர் இல்லம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜன்னல்கள் உள்ளிட்ட முன்பகுதி பலத்த சேதத்திற்கு உள்ளாகின என வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர். எனினும், இந்த இல்லத்தில் தங்கியிருந்த சிறுவர்களுக்கு எவ்விதப்பாதிப்பும் ஏற்படவில்லை.

இரவு 12.15 மணியளவில் இல்லம் மீது கிரனேட்டை வீசிய இனநதெரியாத நபர்கள் பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டனர்.

கிறிஸ்தவ அமைப்பொன்றினால் நிர்வகிக்கப்பட்டுவரும் இந்தச் சிறுவர் இல்லத்தில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட ஏழை அநாதைச் சிறுவர் கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தக் கிரனேற் தாக்குதலுக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச் சேனைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

(எ-க)

லக்சுமி சினிமா இணுவில்
அனைவருக்கும் லக்சுமியின் தீபாவளி வாழ்த்துக்கள்
மகத்தான தீபாவளி புதிய வெளியீடாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினத்தில்
சிம்பு, ஜோதிகா, நடிப்பில்
மன்மதன் (ரீல்ஸ்)
தினசரி: 11.00, 3.00, 7.00, 10.00 புதிய நேரம்
பதிவு ஆசனம்: 0776592008
(38480)



சிற்றி சினிமா பண்டத்தரிப்பு
ரசிகப் பெருமக்கள் அனைவருக்கும் சிற்றியின் தீபாவளி வாழ்த்துக்கள்
இன்றுமுதல்
சிறிகாந், சினேகா, கபாலி நடிப்பில்
போஸ் (ரீல்ஸ்)
தினசரி: 10.30, 2.30, 6.30, 9.30 (புதிய நேரம்)
(38480)

## தமிழீழ நிர்வாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அது சிறுவர் உரிமையாக, கல்வி உரிமையாக, நில உரிமையாக பல்வேறுபட்ட விதத்தில் உரிமைகள் மறுக்கப்பட்டபோதுதான் விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. விடுதலைப் போராட்டம் பல்வேறு வடிவங்களில் ஆரம்பிக்கப்பட்டபோதும், விடுதலைப் போராட்டத்தைத் தீரத்துடன் வழிநடத்திச் சென்றவர்கள் தலைவரின் தலைமையின் கீழ் விடுதலைப் புலிகள் தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

பல்வேறுபட்ட துன்பங்கள், சோதனைகளுக்கு மத்தியில்தான் இந்த விடுதலைப் போராட்டத்தை வழிநடத்திக்கொண்டிருக்கிறோம்.

உலகில் நடக்கும் போராட்டங்களுடன் ஒப்பிடும்போது தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு வித்தியாசமான விடுதலைப் போராட்டம். உலகில் நடந்த விடுதலைப் போராட்டங்களில் இல்லாதவகையில் சமகாலத்தில் நிர்வாகக் கட்டமைப்புக்கள் நிறுவன ரீதியாக, கொள்கைகள் வகுக்கப்பட்டு உருவாக்கப்படுகின்றன. இது எமது போராட்டத்தில் மட்டும்தான்.

போராட்டம் நடந்துகொண்ருக்கும்பொழுதிலேயே - சமகாலத்தில் - நிர்வாகக் கட்டமைப்புக்களை உருவாக்குவதன் மூலம் எமது சமூகம ஆரோக்கியமான - இறுக்கமான - கட்டமைப்பாக இருந்தால்தான் எத்தகைய வலுவான சக்தியுடைய எதிரியையும் முறியடித்து போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்ற தலைவரின் தீர்க்கதரிசனமான முடிவுப்படி கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன. எங்களது நிர்வாகம் இடம்பெறும் பிரதேசத்திலும் அரச நிர்வாகம் இடம்பெறும் பிரதேசத்திலும் உள்ள வேறுபாடுகளை எடுத்துப்பார்த்தால் எமது நிர்வாக அமைப்புகளின் பயனை உணரமுடியும்.

அங்கே மக்களுக்கு நீதி கிடைப்பதில்லை. நீதிமறுக்கப்படுகின்றது. நீதி செலுத்த நீதியாளர்களுக்கு அனுமதியில்லை. அனுமதி வழங்கப்படுவதில்லை. அங்கே நீதியை நிர்வகிப்பவர்கள் ஊழல்களிலும் அராஜகங்களிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழர் தேசத்தையும் சிங்கள தேசத்தையும் எடுத்துப்பார்த்தால், சிங்கள தேசத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து போயுள்ளது.

தெற்கு நீதிநிர்வாகம் மற்றும் பொலீஸ் நிர்வாகங்களையும் எமது பிரதேச நீதிநிர்வாக, பொலீஸ் நிர்வாகங்களையும், சர்வதேச சமூகத்தினர் ஒப்பிட்டுப்பார்த்து, எமது நிர்வாகங்களைப் பாராட்டுகின்றனர்.

எமது நிர்வாகக் கட்டமைப்புக்களுக்கும் மக்களுக்கும் இடையில் இடைவெளி இருக்கக்கூடாது என்று எம்மைச் சந்திக்கும்போது தலைவர் கூறுவார். சகல மக்களும் எமது நிவாகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டால்தான், மக்கள்மயப்பட்ட நிர்வகம் இருக்கும் என்று அவர் கூறுவார். அந்த அடிப்படையில், பல்வேறு வடிவங்களில் மக்களை உள்வாங்கி, மக்கள் போராட்டமாக முன்னெடுத்து வருகின்றது.

அண்மையில் வெளிநாடு சென்றிருந்தபோது எம்மைச் சந்தித்த உயர் அதிகாரிகள், எமது நிர்வாக அமைப்புக்கள் தொடர்பான விவரங்களை எடுத்துக்காட்டினார்கள். தமிழீழ நீதி, நிர்வாகத்துறை, காவல்துறை, தமிழீழ வைப்பகம், பொருண்மியம் என்ற எமது அரச கட்டுமானங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கையிட்டு அங்கு வைத்திருக்கிறார்கள் அவற்றை எமக்குக் காட்டினார்கள்.

விடுதலைப் போராட்டம் நடக்கும் காலத்தில் எவ்வாறு இந்த அளவுக்குக் கட்டமைப்புக்களை உருவாக்க முடிந்தது என்று வியந்து கேட்டார்கள்.

எமது மக்களுக்கு எமது தலைவர் சரியான வழியைக் காட்டிக்கொண்டிருக்கிறார். எமது மக்கள் ஒவ்வொரு கட்டத்திலும் அது இராணுவ நடவடிக்கையாக இருக்கலாம், பொருளாதாரத் தடையாக இருக்கலாம் எம்முடன் தான் உள்ளன. அதனால் எமது நிர்வாகத்தைத் திறம்பட இயக்க முடிகின்றது என்று நாம் அவர்களிடம் தெரிவித்தோம்.

- இவ்வாறு நடேசன் தனது உரையில் தெரிவித்தார்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா, புலிகளின் சர்வதேச அலுவலகப் பொறுப்பாளர் கலாநிதி சோமஸ்கந்தன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர். (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உதயன் தீபாவளி சிறப்புமலர் - 2004

## தீபாவளியாம் திருநாளில்

ஒற்றுமை நட்பு ஓங்கிடவே
ஒன்றாய் உறவுகள் சேர்ந்திடவே
கற்ற அசுரர்கள் இனவாதம்
கக்கும் கொடுமைகள் தீய்ந்திடவே

அரை நூற்றாண்டாய் அழுகின்ற
அழகிய இலங்கை களித்திடவே
கரை காணாத கொடுமைகளைக்
கழைந்தே தீபா வளி வருவாய்!

பொன்னும் மணியும் கிடந்து நிலம்
புரண்ட பெருமை குலைந்து நரி
உண்ணும் உணவாய் நாம்மாற
இன்னும் நாகாசுரன் அரசேன்....

நாகா சுரனை அழித்து வா
நம் தமிழ் அரசு தளைக்க வா
தீபாவளியாம் திரு நாளில்
தீமைகள் ஒழிக்கும் ஒளியாய் வா!

கௌரி

இன்பத் திருநாளாம் தீபாவளி நன்னாளில் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

அசல் 22, கரட் தங்க நகைகளை
கைதேர்ந்த தொழில்நுட்ப
வல்லுநர்களால் மனதைக் கவர்ந்த
டிசைன்களில் செய்துகொள்ள
சிறந்த இடம்...

ஜெகம் நகைஅகம்

நவீன முறையில் மிசின் கட்டிங் செய்து கொடுக்கப்படும்.

கரடிப் போக்கு, கிளிநொச்சி. Tel: 021-2285753





FedEx Express

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளித்திருநாள் நல்வாழ்த்துக்கள்...

திருமுருகன் கொம் நெற்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

Inland & I.D.D Calls, Internet-Browsing & Email, Fax, Photo Copy, Computer typing & Printing, Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services, & Computer-Hand phone Accessories,

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560 Fax - 021 222 7310

E.mail :- thirumuruglan@lycosmail.com

நிரந்தர சமாதானம் எம்மிடம் சேர அனைவருக்கும் எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

V.S.P ஹைந் ஒயில்
பரிமளா ஸ்ரோர்ஸ்

உணவுத் தேவைகளுக்கு சுத்தமாகத் தயாரிக்கப்படுவது.

26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:222 2785

வைஷ்ணவி 23 நகைப் பூங்கா

பிரதான வீதி, நெல்லியடி.

இல்லங்கள் தோறும் இனிமை தரும் நன்னாளாம் இத்திருநாளில் எல்லோருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

நவீனரக டிசைன்களிலான தங்கநகைகள்குறித்த தவணையில் செய்து பெற்றிட சிறந்த இடம்:



எமது அன்பார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

நிமலன் வீடியோ புகைப்படக் கலையகம்

★ டிஜிற்றல் வீடியோ ★ டிஜிற்றல் போட்டோ
★ கொம்பியூட்டர் மிச்சிங் ★ இலத்திரனியல் சாதனங்கள்
★ உதிரிப்பாகங்கள் ★ புகைப்பட உப உதிரிப்பாகங்கள்

அனைத்துக்கும் நம்பிக்கையுடன் நாட வேண்டியது

நிமலன் வீடியோ புகைப்படக் கலையகம்,

யாழ்.சாலை கிளிநொச்சி முல்லைசாலை புதுக்குடியிருப்பு துணுக்காய்சாலை மல்லவி

துல்லியமான தெளிவான படங்களுக்குச் சிறந்த இடம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தீபத்திருநாளாம் தீபாவளி நன்னாளில் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்!

# புகைப்படப் பிரதியாக்கத்துறையில்

# ஒரு பெரும் பாய்ச்சல்...!

3R முதல் 2"x36"

வரை

ஒரே கூரையின் கீழ் மூன்று சேவைகள் குடாநாட்டில் இங்கு மட்டுமே...!




அறிமுகம் 1998இல் Konica

அறிமுகம் 2001இல் Frontier (Fuji)



Frontier-350





Noritsu QSS-3201

அறிமுகம் 2004இல் Kodak

தன்னிகரில்லா சேவை... சேவையால் கிடைத்த பெருமை...

## ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப் & கொனிகா கலர் லாப்

14,வேங்கடேசன் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P : 021 222 3493

ஃ

அழகிய தங்க நகைகளை அதி நவீன வடிவமைப்பில் செய்திட

# சிறிராம்

ஜுவல்லர்ஸ்

193, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5800
0777 730567

மின்னிப் பளிச்சிடும் அழகு தங்க நகைகள் செய்திட

# சிறி அமலா

ஜுவல்லர்ஸ்

74/1கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்புமலர் - 2004

ஒளியினை ஏற்றி இருளினைப் போக்கி
உள்ளொளி கண்டு உயிர்ப்புறு மாறு
வழிவழி வந்த தீபாவளி நாள்
வாழ்வினில் சாந்தியை வரித்திடும் திருநாள்
பழிகளும் பாவமும் பொறிவழி புலன்களிற்
பற்றிடா வண்ணம் பார்த்திடும் பெருநாள்
தெளிவிதை உணர்ந்து தெய்வம் தொழுது
தென்பினைப் பெற்றுத் திழைப்பதே நன்று !

பண்டிகை எல்லாம் சுற்றம் தழுவிட்டு
பாங்குடன் மனைகளில் எடுப்பதே மரபு!
இன்றெலாம் எங்கும் எடுக்கலாம் என்று
இயம்புதல் எல்லாம் எடுப்பலால் வேறிலை
துன்பமும் போரும் தொடருமிந் நாளில்
தூய்மையாய் மனித நேயமே பேணி
அன்பினில் விளைந்து ஆணவம் அடக்கி
அமைதியில் திழைத்திட உழைப்போம்.

நயினைக் கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை.

## வா கண்ணா!!

தீபாவளியாம் திரு நாளில்
செழிப்பில் மிதக்கும் எம் மண்ணோ
நரகாசுரனின் காலடியில்
நசுங்கிக் கிடக்கே பார் கண்ணா

அடிமை அகதிநிலை சாய்த்து
அன்பும் அறமும் கரைபுரளும்
விழவு தருவாய்! அசுரர்கள்
வீழ முன்போல் வா கண்ணா!!

தேச இருளை நீக்கி நாம்
தீபம் ஏற்றி மகிழ்தற்குக்
சோதி வடிவாய்த் தோன்றிடுவாய்
நீதி நிலைக்கச் செய்திடுவாய்

நெடுந்தீவு லக்ஸ்மன்.



தீபத்திருநாளாம் தீபாவளி நன்னாளில்
அன்பர்கள் அனைவருக்கும்
எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
மகிழ்ச்சியுறுகிறோம்!
எங்களிடம் கண்ணாடி, கைபிடி, பூட்டு, பலவர்ண பொமிக்கா, அலுமினிய பார் வகைகள், ஒட்டுப்பலகை M.T.F போட், காட்போட் தரை விரிப்பு என்பவற்றைப் பெற்றுக்கொள்வதுடன் ஓடருக்கு அலுமினிய அலுமாரி, கதவுகள் என்பன செய்து கொடுக்கப்படும்.
ஜெசீமா பிக்சர் பலஸ்
302, 304, 308, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 3124

ஓம் வீராட் விஸ்வப்பிரம்மனே நமஹ!
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

ஸ்ரீ நாகா பம்பே டிசைன் அன் கட்டிங் சென்ரர்
நவீனமுறையில் தங்க நகைகளை கலையசத்தோடு கூடிய பம்பே டிசைன் மெசின் கட்டிங் மூலம் செய்து பெற்றுக்கொள்ள
ஸ்ரீ நாகா பம்பே டிசைன் அன் கட்டிங்ஸ் சென்ரர்
288, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: ஐ.சுரேஸ், 077 – 6147358
ஓடர் நகைகளும் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

தித்திக்கும் இனிய தீபாவளிப் பண்டிகை நன்னாளில்
அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்
★ சகல விதமான உழவு இயந்திர உதிரிப்பாகங்களுக்கும்
★ மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களுக்கும்
★ முச்சக்கர வண்டி உதிரிப்பாகங்களுக்கும்
நம்பிக்கையோடு நாடுங்கள்:

கந்தையா பல்பொருள் உதிரிகள் வாணிபம்
கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி
உங்கள் தேவை! எங்கள் சேவை

யப்பான் சைக்கிள்

* கியர், ஓட்டோமெற்றிக் லைட், கப்பிறேக் போன்ற விசேட அம்சங்களுடன் பல மொடல்களில் யப்பான் சைக்கிள்.
* போலியான பளபளப்புக்களை நம்பி ஏமாறாமல் குறைந்த விலையில் கிடைக்கக்கூடியதும், ஓட்டத்திற்கும், நீண்டகாலம் செலவின்றிப் பாவிக்கக்கூடியதுமான ஒரு சைக்கிளை வாங்குவதற்கு வாருங்கள்.
சித்திவிநாயகர் யப்பான் சைக்கிள் (B) பஜார்
இல. 651, ய கே.கே.எஸ். ரோட் யாழ்ப்பாணம்.
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் அருகில்)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

வடபகுதியில் முதற்தர ஓவிய வேலைகள், டிஜிற்றல் பிறிண்ட் வேலைகள், பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள், பாடசாலை மொனிட்டர் பிறிபெட், சின்னங்கள், ஸ்ரெக்ஸ், சினிமா சிலைட், இலக்கத் தகடுகள், ஸ்கிறீன் பிறிண்டிங், கலர் இறபர் சீல்கள் பொலிமர் சீல்களுடன் இன்னும் ஓவியத்தின் அனைத்துப் பரிமாணங்களையும்
ஒரே கூரையின் கீழ் ஓடர் கொடுத்துப் பெற
35,Kannathiddy Road, Jaffna
T.P: 0777-110610


நியூ சகானா ரெக்ஸ்ரைல்
SHAHANAA Textiles
இல. 100, பெரிய கடை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 – 6147418
No. 100, Grand Bazaar, Power House Road, Jaffna
Tel: 077-6147418


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்புமலர் - 2004

## சானுகா 50 நகைமாடம்

அழகு நகைகளின் அரங்கம்

SHANUGA NAGAI MADHAM

200G கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 3700

மகிழ்ச்சிகரமான தீபாவளித் திருநாளில் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்!



---

தித்திக்கும் தீபாவளி நன்னாளில் அனைவருக்கும்
எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!
இதோ யாழ்.மக்களுக்கோர் புத்துணர்வூட்டும் செய்தி! புதுப்பொலிவுடன் திகழும்

## பவர் செலுலர் ரேடிங் கம்பனி நிறுவனத்தினர்



இப்பொழுது வடமராட்சி மக்களுக்காகத் தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கப்பெற்று, மிகத்துல்லியமானமுறையில் உங்கள் அன்புச் செல்வங்களுடன் பேசி மகிழ வகை செய்துள்ளனர்.

இன்றே விரையுங்கள்:- பவர் செலுலர் ரேடிங் கம்பனிக்கு

மேசைத் தொலைபேசி விற்பனையில் முன்னோடியாகத் திகழும் பவர் செலுலர் ரேடிங் கம்பனி நிறுவனத்தினர்

குறிப்பு :- இம்மேசைத் தொலைபேசிகள் யாவும் அன்ரனா இணைப்புகள் மூலமும் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு இணைப்புகள் யாவும் 24 மணி நேரத்தில் பெற்றுத்தரப்படும்.

எமது சேவை ஸ்ரீலங்கா ரெலிக்கொமின் துணை நிறுவனமாகிய
மொபிட்டல் பவர் செலுலர் ரேடிங் கம்பனி

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம் 205/1. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [ராஜா தியேட்டர் அருகில்].
அலுவலக T.P 021-222-7070. 0712-399220. Hot Line : -0777-281521

---

## SKY COMPUTERS(PVT)LTD

AFFILIATED WITH IRISH INTERNATIONAL UNIVERSITY(IIU)

No.89, Kandy Road, Chundikuli, Jaffna — No.90, Galle Road, Colombo

- * Diploma in MS Office - 3Months
- * Certificate in MS-Word - 1Month
- * Certificate in MS-Excel - 1Month
- * Certificate in MS-Access - 1Month
- * Certificate in MS-Power point-1Month
- * Diploma in Desk Top Publishing- 3Months
- * Certificate in Adobe Photoshop - 1Month
- * Certificate in Adobe PageMaker- 1Month
- * Certificate in CorelDRAW - 1Month

Introduction

E-mail: skycom@wow.lk

Today you learn Tomorrow you lead

Sony, Panasonic, LG FRIDGE

SKY COMPUTERS(PVT)LTD
ELECTRONIC SYSTEM
01c.Stanley Road, Jaffna. T.P: 222 5349

---

## வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!

# Aero Lanka

*New way of flying*
*In Domestic Operation.....*





Aero Lanka Jaffna

Serendib Inn Jaffna



| Head Office | Branch | Jaffna Office | Trinco Office |
|---|---|---|---|
| No :500<br>Gale Road<br>Wellawatta,<br>Colombo-06.<br>Tel : 2505632 | No :295<br>Jampettah Street,<br>Colombo-13<br>Tel : 2430782<br>Fax : 2430782 | No : 86<br>Point Pedro Road,<br>Jaffna<br>Tel : 021-2226242<br>Fax : 021- 2225600 | No : 47,<br>Kandy Road<br>Trincomalee.<br>Tel : 026-2221519<br>Fax : 026-2221519 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசுர இருளகன்று அருளொளி வீசும் இனிய திருநாள் தீபாவளி

சைவமக்கள் கொண்டாடப்படுகின்ற தமிழ் விசேட பண்டிகைகளுள் தீபாவளியும் ஒன்று. தீபாவளி என்றால் தீபவரிசை என்று பொருள். தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து அந்த தீபஒளியிலே இறைவனைக் கண்டு வழிபடுவது நமது மரபு.

அந்த தீபாவளி தீபத்திருநாள் என்று போற்றப்படுகின்றது. இறைவன் ஒளி மயமானவன். சுடர் ஒளியிலே இறைவன் காணப்படுகின்றான். அருட்பெருஞ் ஜோதியாக விளங்கி ஆதியும் அந்தமும் இன்றி இப்பரந்த நிலவுலகின்கண்ணே வாழுகின்ற சர்வ ஜீவராசிகளுக்கும் ஒரே தலைவனாக மிளிரும் இறைவனை இந்தத் தீபாவளி நன் நாளில் கண்டுதருசிப்பது புண்ணியமாகும்.

தீபாவளி பண்டிகை என்றால் என்ன? அது எவ்வாறு தோன்றியது என்பதற்கு புராண வரலாறு ஒன்று சான்றுபகர்கிறது.

நரகாசுரன் என்றோர் அரக்கன் இருந்தான். அவன் தனது தவ வலிமையால் பல வரங்களைப் பெற்று சர்வலோகங்களையும் ஆட்டிப் படைத்தான். கொடுமையே அவன் வடிவமாக இருந்தது. எல்லோரும் அவனைக் கண்டு அஞ்சி நடுநடுங்கினர்; ஓடிஒளிந்தனர். அவனுடைய கொடுமை தேவலோகத்திலேயுள்ள தேவர்களை யெல்லாம் நடுங்கவைத்தது. அனைவரும் அச்சத்தினால் பயந்தே வாழ்ந்தனர். அதன் காரணமாக தேவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து திருமாளிடம் சென்று முறையிட்டனர். "ஐயனே! நரகாசுரனின் கொடுரம் தாங்க முடியவில்லை. தேவ ரீர் திருவுளமிரங்கி அரக்கனைக் கொன்று எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர்.

அவர்களின் வேண்டுதலுக்கு இரங்கிய திருமால் நரகாசுரனுடன் போர் தொடுத்தார். அசுரனும்தன்னுடைய தவத்தின் மேன்மையால் அவருடன் போர் புரிந்தான். இருவருக்கும் கடும் சண்டை



நடந்தது. ஈற்றில் சக்கராயுதத்தினால் அவரைக் கொன்றார் திருமால்.

நரகாசுரன் இறக்கும் தருவாயில் திருமாலைப் பார்த்து, பிரபுவே இதுவரை காலமும் நான் எல்லோருக்கும் தீங்கிளைத்தேன் அதனால் எல்லோரும் துன்பப்பட்டார்கள். ஆகவே , நான் இறந்த நாளாகிய இன்றைய தினத்தை எல்லோரும் மகிழ்ச்சியாக கழிக்க வேண்டும். அதற்கு நீங்கள் அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். அதைக்கேட்ட திருமாலும், " அப்படியே ஆகட்டும்". நீ இறந்த நாளை தீபாவளி என்று எல்லோரும் கொண்டாடி மகிழ்வர். புத்தாடை அணிந்து இனிப்புக்கள் உண்டு களிப்புடன் இருப்பர் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அவ்வாறு அந்த அசுரன் அழிந்த நாள்தான் இந்தத் தீபாவளி. இன்றைய தீபாவளி நன்நாளில் அதிகாலையில் எழுந்து புண்ணிய நீராடி, கடவுளை வணங்கி, புத்தாடை அணிந்து, இனிப்புப் பதார்த்தங்களை உண்டு, உறவினர் களுடன் அளவளாவி மகிழ்தல் தமிழர் வழமை.

சிவநெறிக் கலாநிதி,
கவிமணி சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்.

சிறுவர் சிறுமியர்களுக்கு தீபாவளி என்றால் ஒரே கொண்டாட்டந்தான். புதிய ஆடைகளை அணிந்து, நண்பர்களின் வீடுகளுக்குச்சென்று விளையாட்டுக்கள் விளையாடி, இனிய தின்பண்டங்களை ருசிபார்த்து, தித்திக்கும் தேன்குழல் அருந்தி இன்புறுவர்.

ஆகவே, சைவமக்களாகிய நாமும் இன்றைய தீபத்திருநாளாகிய தீபாவளிப் பண்டிகை நன்னாளில் ஒளியேவடிவான இறைவனைத் தீபஒளியிலே கண்டு வணங்கி நல்லருள் பெற்று, எல்லாம் வல்ல ஆண்டவன் அருட்பார்வையில் அகப்பட்டு இந்த மானுடவாழ்க்கையிலே சதுர்வித பல் புருஷார்த்தங்களைப் பெற்று, சகல சௌபாக்கி யங்களும் கைவரப் பெற்று இன்பவாழ்வு வாழ அவனருளையே நாடிநிற்போம்.

"ஆண்டிலோர் தீபாவளியாம்! அதை ஆண்டியும் கொண்டாட வேண்டுமாம்"




வாழ்வின் தீப ஒளி எங்கும் பரவுக!

இத் தீபாவளித் திருநாளில் சுபீட்ச ஒளியினால் இல்லங்கள் தோறும் மகிழ்ச்சி பொங்கட்டும்.

காக்கும் கரங்கள்

ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை

www.liclanka.com

Rediffusion | DYR - 502/11/04

# உதயன் தீபாவளி சிறப்புமலர் – 2004

## தீபாவளியே வா! வா!

அவனி தனில் தமிழரினை
ஆதரிக்க எவருமில்லை
இனிய வாழ்வு மலரவில்லை
ஈசன் துணை புரியவில்லை
உறங்கிடவே இடமுமில்லை
ஊண் எமக்குக் கிடைப்பதில்லை
எண் எழுத்து கற்றிடவே
ஏழ்மை நிலை மாறவில்லை.
ஐயமது மாறியிங்கு
ஒளி பரப்ப தீபாவளியே
ஓடியிங்கு வாராயோ?
ஔவை வழியை நினைவூட்டி
அ·தே இன்பத்தைத் தாராயோ...

– நாகமணி
மகேந்திரலிங்கம்.



## தீபாவளிவேண்டுதல்

துன்பங்கள் யாவுமே நீங்கிடவும் – என்றும்
தூய நினைவுகள் ஓங்கிடவும்
அன்பு மனத்தினில் நிறைந்திடவும் – நாம்
அவனியில் வேண்டுதல் செய்திடுவோம்.

புத்தாடை தனை அணிந்திடுவோம் –
நெஞ்சில்
புதிய நம்பிக்கையை ஏற்றிடுவோம்,
நித்தமும் வாழ்வில் நிறைவு வர அந்த
நிமலனின் பாதத்தை வேண்டிடுவோம்.

ஏழையர் தங்கட்கிரங்கிடுவோம் – நாம்
என்றும் பகுத்துண்டு வாழ்ந்திடுவோம்,
நாளை வருவது நன்மையென்றே – மன
நம்பிக்கையோ டிங்கு வாழ்ந்திடுவோம்

– சந்திரமௌலி

## தீபமேற்றுவோம் வாரீர்!

தீபத் திரு நாளில் – எங்கும்
தீந்தமிழின் கீதம் ஒலிக்க
தூப மணங்கமழத் – தேசமெங்கும்
இன்ப ஒளி பரவ
துன்புற்ற வாழ்வின்
துயரத்தின் கதை முடிக்க

இன்புறத் தென்பது பெற்று
இனிய நல்லறம் ஓங்க
மாயவன் அடி தொழுது
தீபமேற்றுவோம் வாரீர்!

எம்.சுயர்சன், கோண்டாவில்

## சுடரொளி ஏற்றுவா!

துன்பகாலங்கள் கழிந்து
தூய நினைவுகள் மலர்ந்து
பார்போற்றும் சமாதானம் நட
வரம் வேண்டி நிற்கின்றோம்
அவனியிலே அன்பெனும்
இன்ப நல்லறம் ஓங்க
– தீபாவளியே!















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத் தீபத்திருநாள் உங்களின் வாழ்வில் சமாதானத்தையும், மகிழ்ச்சியையும், அமைதியையும் கொண்டுவர வாழ்த்துகின்றோம்

இந்துக்களின் ஒளித்திருநாளான தீபாவளி தினத்தன்று கடந்த வருடத்தைப் போலவே இம்முறையும் மக்கள் வங்கியின் குறிப்பிடப்பட்ட சில கிளைகள் உங்களின் கொடுக்கல், வாங்கல்களுக்காக திறந்திருக்கும்.




தீபாவளி தினத்தன்று மக்கள் வங்கியிலுள்ள உங்களின் சேமிப்பு கணக்கில் ரூபா 15,000/= த்தினை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை ஒரு வருடத்திற்கு வைப்புச் செய்யும் போது இந்துக்களின் பாரம்பரிய கலாச்சாரத்தின் அடையாளமான ஓர் அழகிய பித்தளை விளக்கு உங்களுக்கு பரிசாக காத்திருக்கின்றது.

எமது பிரதான சம்பிரதாயபூர்வ தீபாவளி வைபவம் வெள்ளவத்தை மக்கள் வங்கி கிளையில் நடைபெறுவதுடன், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி ஆகிய கிளைகளிலும் விசேட வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எமது அனைத்து வாடிக்கையாளர்களையும் மேற்குறிப்பிடப்பட்ட கிளைகளில் ஒளித்திருநாளை கொண்டாட எம்முடன் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள் மனமறிந்த வங்கி
**மக்கள் வங்கி**

**இன்றைய தினம் திறந்திருக்கும் எமது ஏனைய கிளைகள்.**

அட்டாளச்சேனை, அக்கரைப்பற்று, அம்பாறை, கல்முனை, காரைதீவு, மஹாஓயா, நிந்தவூர், பொத்துவில், சம்மாந்துறை, திருக்கோவில், உஹன, பதுளை, பண்டாரவளை, ஹப்புத்தளை, பசறை, ஜிந்துபிட்டிய, கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், செட்டியார் தெரு, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை , தெஹிவளை (காலி வீதி), கம்பளை, கண்டி, புஸ்ஸல்லாவ, தெல்தோட்டை, மாத்தளை, ஹட்டன், மஸ்கெலிய, நுவரெலிய, இராகலை, தலவாக்கலை, உடபுஸ்ஸல்லாவ, பலாங்கொட, அச்சுவேலி, சாவகச்சேரி, சங்கானை, சுன்னாகம், யாழ்ப்பாணம் கன்னாத்திட்டிக்கிளை, யாழ்ப்பாணம் பிரதான வீதி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதி, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கிளிநொச்சி, மன்னார், மாங்குளம், முருங்கன், முல்லைத்தீவு, பரந்தன், வவுனியா, மட்டக்களப்பு, மட்டக்களப்பு நகர், செங்கலடி, ஏறாவூர், களவாஞ்சிக்குடி, காத்தான்குடி, வாழைச்சேனை, கந்தளாய், [illegible] திருகோணமலை நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்புமலர் - 2004


இனிக்கும் இன்பத் தீபாவளித் திருநாளில்
நண்பர்கள், நலன்விரும்பிகள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!



RAVE Motors

சீனத்தயாரிப்புக்களான முற்றிலும் புதிய மோட்டார் சைக்கிள்கள், இவற்றிற்கான றீக்கொண்டிசன் மோட்டார் சைக்கிள்கள், உதிரிப்பாகங்களுக்கு இன்றே விரையுங்கள்...



ரவி மோட்டோர்ஸ்
52 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 222 2048


## சத்திமிக்க தீபஒளி!

காரிருளை நிலையாக்கி கணம்நீளும் காலமதில்
கொலுவிழந்த நெஞ்சோடு காலையிலே துயிலெழுந்து
சோர்விழந்த சிந்தையது நல்லொளியை நாடிநிற்க
சக்திமிக்க 'தீபஒளி' சுடரோங்கி விடிவு தரும்
ஊரெல்லாம் தேடியே அமிர்தத்தைக் குடித்தாலும்
உறவெல்லாம் தம்மனையில் வாழும் நல்நிலை வேண்டும்
பாரினிலே படிந்திட்ட கறையதனை ஒளியதனால்
பதியகற்றி வாழுகின்ற பேறெமக்கு வாராதோ!

அல்லையூர் கே.ஆர்.திருத்துவராஜா

## தொல்லைகள் நீங்கிட வேண்டும்

தீபாவளி வந்திட வேண்டும் - நல்ல
தீபங்கள் ஏற்றிட வேண்டும்
தீயவர் அழிந்திட வேண்டும் - நமது
தொல்லைகள் நீங்கிட வேண்டும்.

தமிழினம் வாழ்ந்திட வேண்டும் - அவர்
சொந்த நிலம் மீண்டும் கைசேர்ந்திட வேண்டும்
புலம் பெயர்ந்தவர் வந்திட வேண்டும் - இங்கு
புது வாழ்வு பிறந்திட வேண்டும்

தேவர் பட்ட துயரையெல்லாம் தீர்த்தளித்த மாயவனே
ஆருமற்ற அனாதைகளாய் அல்லலுறும் தமிழரெமை
நாடு போற்றும் மக்களாய் விளங்க வைத்தல் உன் கடனே
தேரேறிச் சென்ற கண்ணா நிதமுனைத் தொழுவோம் !


ஆனந்தன்.


உங்களின் இசை ஆவல்களைப் பூர்த்தி செய்ய எம்மிடம்

- புதிய, பழைய இடைக்கால AUDIO CD'S
- புதிய பழைய VIDEO CD'S
- அனைத்து வகையான MP3 CD'S
- கர்நாடக சங்கீத CD'S
- தமிழ், ஆங்கில DVD
- இந்தி, கிறிஸ்தவ பக்திப்பாடல் CD'S
- SOFT WARES, GAME CD'S

★ கிருபானந்தவாரியாரின் சொற்பொழிவுகள்
★ கல்வி சம்பந்தமான Software CD க்கள்

உலக நாடுகளின் டிஸ்கவரி CD's
குழந்தைகளுக்கான நேசரிஸ் CD's



மற்றும் CD'S கவர், Blank CD போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுகொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:-

Music World
ITN வீடியோ ஓடியோ மியூசிக் சென்டர்

மகிழ்ச்சி பொங்கும் மங்களத் திருநாளாம் தீபாவளி
நன்னாளில் எமது நல்வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகட்டும்.

நவநாகரிக நவீனமய ஆடைகள், புத்தம்புதிய சாறி வகைகள், நங்கையருக்கேற்ற ஜவுளிகள் அனைத்துக்கும் அதிசிறந்த உன்னதமான இடம்:

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்
10, POWER HOUSE RD, GRAND BAZAAR, JAFFNA.
(மலயன் கபே முன்பாக)
T.P: 0777 - 311486
MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

இன்ப ஒளி வீசிவரும் இத்தீபாவளி நாளில் அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இன்பத் தீபாவளி வாழ்த்துக்களை வழங்கும்!

தரமான 22 கரட் தங்க
நகைகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

மைதிலி நகைமாடம்




காலத்தால் அழியாத, கற்பனைக்கும் எட்டாத, எழில் கொஞ்சும் தங்க நகை தயாரிப்பாளர்கள்
ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்புமலர் - 2004

தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள்
நல்ல முறையில் உத்தரவாதத்துடன்
நகைகளை செய்து கொடுப்பவர்கள்

செல்வி நகை அகம்

1/2 கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
(தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)


## கண்ணா தர்மம் தழைப்பதற்காய்.

காத்தற் கடவுளே!
கண்ணபரமாத்மா!
தர்மம் எங்கே? எங்கே?
தெய்வமே, தேடி நிற்கிறோம்.
போட்டி பொறாமைகள்,
வீடுகளில் வேலைத் தலங்களில்,
ஆலய நிர்வாகங்களிலுமே.
நிலத்தில் நடமாடுகின்ற
நிலையற்ற சமாதானமுமே,
கலையட்டுமா என்கையில்
கண்ணா,நீ எங்கேயப்பா,
தர்மம் தழைப்பதற்காய்....
அன்று வாக்குத் தந்த
வேங்குழலோனே
இன்று தீபாவளித் திருநாள்
வரிசையாய்
தீபங்கள் ஏற்றி வணங்குகிறோம்
கண்ணா கருணைக் கடலே!!
எல்லாவற்றுக்குமாய் எழுந்து வா

மீசாலையூர்
கமலா,






## மோகனத் தீபாவளி

வெள்ளைப்
புறாக்கள்
வானில் பறந்திட
இல்லங்கள்
மகிழ்ந்திடும்
தீபாவளி

மல்லிகைப்
பூக்கள்
மாலைகள்
கோர்த்திட
பிள்ளைகள்
சிரித்திடும்
அன்புத் தீபாவளி

துள்ளிடும்
நிலாக்கள்
தூய்மையை
கொட்டிட
எல்லோரும்
கொண்டாடும்
ஈகைத்தீபாவளி

பள்ளங்கள்
மேடுகள்
பூமியில்
சமனாகிட
உ ள்ளங்கள்
நாளும்
உயர்ந்திடும்
தீபாவாளி

சத்தியம்
தர்மம்
சமத்துவம்
மலர்ந்திட
முத்துக்கள்
குளிக்கும்
மோகனத்
தீபாவளி
நல்லைஅமிழ்தன்

-நல்லை
அமிழ்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்புமலர் – 2004

## தித்திக்கும் தீபாவளியே!

தித்திக்கும் தீபாவளியே!
தத்தி வரும் மழலை கூட – உன்
நாமம் கேட்கையிலே
மத்தாப்பாய் சிரிக்கிறது.

பட்டாடை கட்டிய
பருவச் சிட்டுக்கள் – இன்று
புத்தாடை கட்டி
புதுப்பொலிவுடன் ஜொலிக்கிறது......

நெற்றி முத்துப் போல்
பொட்டு வைத்துக்கொள்ளும்
கூந்தல்களில்
மல்லிகை வாசம் வீசுகிறது....

குடும்பங்கள்
பூஞ்சோலையாக மாறி
இன்ப பந்தத்தில்
லயித்துக் கிடக்கின்றன.....

பலகாரத் தட்டுக்கள்
பரிமாறப் படுகையிலே
பகைமை மறந்து – மனம்
பாகாய்க் கரைகிறது....


பட்டாசு வெடிச்சத்தம்
பாரெங்கும் கேட்கிறது – இது
'தப்பான' சத்தமில்லையென
எல்லோருக்கும் புரிகிறது.

கடந்தகால நினைவுகளை
கத்தரித்து விட்டு – ஒரு
புதுயுகத்தை அனுபவிப்பது போல்
உள்ளங்கள் உணர்கின்றன!!

இத்தனை மாற்றங்களும்
உன்னால்தான் வந்ததென்றால்
தித்திக்கும் தீபாவளியே – நீ
நித்தமும் வந்தாலென்ன?

ஆசிரியர் சி. ஏ. யசீகரன்


அனைவருக்கும் எமது இன்பத் தீபாவளி
வாழ்த்துக்கள் உரித்தாகுக




சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்
புனரமைப்பின் புத்தொளி வண்ணம்
CIC Paints
ICI Dulux
வண்ணங்களின் வாய்மொழி
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:-021 2763



செல்வா எலக்ரோ பிளேற்றிங்

ஸ்தாபனத்தார்
அனைவருக்கும் தீபாவளி
நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
பெருமகிழ்ச்சி அடைகின்றார்கள்.

- உங்களுக்கான எலக்ரோ பிளேற்றிங் அனைத்தும் இந்திய நிபுணர்களின் விசேடமான நேரடிப்பார்வையின் கீழ் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
- ஆட்டோ உதிரிப்பாகங்கள், சகலவித மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் அனைத்தும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

செல்வா எலக்ரோ பிளேற்றிங்
120. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். ☎ : 2873



துர்க்கா நகைப்பூங்கா



அன்பர்கள், ஆதரவாளர்கள்
நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இதயத்தில் இன்ப
ஒளி துலங்கிட தனதுஇனிய
தீபாவளி நல்வாழ்த்துக்களைத்
தெரிவிக்கின்றது.

துர்க்கா நகைப்பூங்கா
71, கன்னாதிட்டி,
கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

- உங்களுக்கு வேண்டிய அழகிய, அசல் தங்க நகைகளை விருப்பத்திற்கேற்ற டிசைன்களில் வடிவமைத்துத் தருபவர்கள்
- ஓடர்நகைகள் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.



இத்திருநாளில் அன்பர்கள்,
ஆதரவாளர்கள் நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம் இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!

நம்பிக்கை,
நாணயம்,
உத்தரவாதத்துடன்
தங்கநகைகளைச்
செய்து பெற்றுக்கொள்ளலாம்.



அரவிந்தன்
நகைமாடம்
Aravinthan
NAKAI MADAM
Genuine 22kt Jewellery
Manufacturing Jewellers

22 கரட் தங்க நகைகள்
குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
செய்து பெற்றுக்கொள்ளலாம்.

1/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 077– 6070670



அன்பர்கள் நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது தித்திக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஏசியன் வீட்டுத் தளபாடம்



குறைந்த விலையில் நிறைந்த
தரத்தில் வீட்டுத்தேவைகளுக்கான
சகல தளபாடங்களும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

☞ கிச்சின் கபேட்கள் ஓடருக்குச்
செய்து கொடுக்கப்படும்.

☎ : 0777-536108


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்புமலர் - 2004



நாட்டினில் நல் அமைதி நிலவிட ஒளியேற்றி வந்திட்ட தீபத்திருநாளாம்
இத்திருநாளில் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

- காலத்துக்குக் காலம் ஈடு இணையற்ற புத்தம் புது டிசைன்களில் நகைகளை நவீனமாக வடிவமைப்பவர்கள்.
- காலத்தால் அழியாத, கற்பனைக்கும் எட்டாத அற்புத எழில்மிகு ஆபரணப் படைப்பாளர்கள்.
- தங்க நகையுலகில் மங்காப் புகழுடன் ஒளி வீசி, தனக்கென தனியிடம் வகித்து நிற்பவர்கள்.

நியு நகுலா ஜுவல்லறி
இல.74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3433

நியு லலிதாஸ் ஜுவல்லறி
இல. 171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3433



## தீபாவளியே வா! வா!

அவனி தனில் தமிழரினை
ஆதரிக்க எவருமில்லை
இனிய வாழ்வு மலரவில்லை
ஈசன் துணை புரியவில்லை
உறங்கிடவே இடமில்லை
ஊன் எமக்கு கிடைக்கவில்லை
என் எழுத்துக் கற்றிடவே
ஏழ்மை நிலை மாறவில்லை
ஐயமது மாறியிங்கு
ஒளி பரப்ப தீபாவளியே
ஓடியிங்கு வாராயோ
ஔவை வழியை நினைவூட்டி
அஃதே இன்பத்தைத் தாராயோ....

ஆவரங்கால் மாருதி

தீபத் திருநாளாம் இத்திருநாளில் அன்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்.
வண்ண வண்ண ஆடைகள் எத்தனையோ
அத்தனையும் உங்கள்
எண்ணம்போல் தெரிவு செய்திட



கோபிகா ஆடையகம்
இல. 5/4, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

சிறி மதனா நகைமாளிகை
இல. 155 M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 222 7772, 0777-300185

மதனா ஜீவல்லறி
இல. 173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021-222 5526

ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.



தித்திக்கும் திருநாளாம் தீபாவளி நன்னாளில் அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

- காலத்தால் அழியாத
- கற்பனைக்கும் எட்டாத
- எழில் குன்றா அற்புதப் படைப்புகள்
- பார்ப்பவர் கண்களில் பளிச்சிடும் அசல் ரகங்கள், குறிப்பிட்ட தவணையில் தரமாகவும் நியாயமாகவும் பெற்றிட நாடுங்கள்:

சாரங்கன் நகை மாடம் அன்ட் சென்ரர்
இல. 45 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 222 6059

சாரங்கா நகை மாடம்
இல. 157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 2480, 6972,
இல. 177 A, இல் இயங்கிவந்த சாரங்கா நகைமாடம் தற்பொழுது இல 157/1 இல் இயங்கிவருகின்றது.

அருள் முருகன் நகை மாடம்
இல. 96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்

TVS LANKA (PVT)LTD. இன்
அங்கீகாரம் பெற்ற யாழ்.
விற்பனை முகவர்





யசோ மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:- 222 2544

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Speakers & Woofers

சிறப்பு அறிமுக விலையில்

5.1 with remote
4.1
2.1
multimedia speakers

Web Camera/MP3/InfraRed

With mic
USB- PC to Mobile Infrared connectors
USB- Flash Drive MP3 player + FM radio Voice recorder

TV cards - External/Internal

With FM radio + Remote

விசேட விலைக் கழிவுகளுக்கு எமது காட்சியறையை நாடுங்கள்

Hubs/Switches

8 ports/ 16 ports

External Mobile Racks

CD/DVD/Combo external rack
Hard disk mobile rack
Lap-top Hard disk mobile rack
USB interface

அதிநவீன புத்தம் புதிய கணினிகள்
Visit our showrooms for best pricing
ரூ 33,000 /= தொடக்கம்
AMD/Intel P4 Computers
Also Avilable All Computer accessories
warranty 3 Years warranty

WITH GUARANTEE
PC REPAIRS UPGRADES
Call your nearest branch for Mobile Service


தற்பொழுது நவீன காட்சியறையுடன்
Open on Sundays & Poya days 9am to 1pm.
சிறப்பு சலுகைகள் அறிமுக விலைகளுடன்

வவுனியாவில்
மைக்ரோ பிசி சிஸ்ரம்ஸ்
(வவுனியாவில் எமக்கு வேறு கிளைகள் இல்லை)

# MICRO PC SYSTEMS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 175/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 2225893, 071 2374181 |
| நெல்லியடி | பிராதான வீதி நெல்லியடி, (பொலிஸ் நிலையமருகில்) தொ.பே.: 077 3039536 |
| வவுனியா | 73C, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. தொ.பே.: 024 4588339, 0777308417 |
| வெள்ளவத்தை | 15, 36வது ஒழுங்கை கொழும்பு–06 தொ.பே.: 011–4513235,011–4516764 |
| கொட்டாஞ்சேனை | 82, புதுச் செட்டித் தெரு, கொழும்பு–13 தொ.பே.: 011–4613617, 011–4619673 |
| திருகோணமலை | 148, பிரதான வீதி, திருகோணமலை. தொ.பே.: 026 222 1054 078–5720369. |

CORPORATE OFFICE: No.37, 37th Lane, Wellawatte, Colombo-06. Tel: 0114 510686


இன்னல்கள் போக்கியெங்கும் இருளகற்றி ஒளிபரப்ப இகமீதில் தோன்றிய இத்தீபத் திருநாளில் ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறது.

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்





# கோடன்

## தானியங்கி பொறியியல் நிறுமம்

யாழ். சாலை, பரந்தன் சந்தி, கிளிநொச்சி.

வன்னி, யாழ் ஊர்தி உரிமையாளர்களின் நீண்டகால கனவை நனவாக்க உங்கள் காலடியில் ஊர்திகளின் அனைத்துப் பணிகளையும் கணனி மயப்படுத்தப்பட்டு பொறியியல் வல்லுநர்களின் பணி உறுதிப்படுத்தலுடன் ஒரே கூரையின் கீழ் செய்துகொள்ள பரந்தன் சந்தியில் புதுப்பொலிவுடன் உதயமாகியுள்ள

## கோடன் தானியங்கி பொறியியல் நிறுமம்

எம்பணியில் என்றும் நீங்கள் மனம் மகிழ்ந்திட நாம் வழங்கும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைகள்

- எவ்வகை ஊர்திகளையும் மிகச் சிறந்த முறையில் தூய்மிப்பி செய்யலாம்.
- ஊர்திப்பொறியியல்
- உமஷாக்கி, ரீ.வி.எஸ். பிறீசேவிஸ்
- ஊர்தி வர்ணப்பூச்சு
- இன்ஜெக்ரர் பம் சேவீஸ்
- அனைத்து வகையான போறிங் வேலைகளும்
- கிராங் வெட்டுதல்
- கடைச்சல்
- மின்னிணைப்பு
- வில்லுத்தகடு பொருத்துதல்
- றேடியேற்றர்
- ரிங்கர்
- சீற் தையல் வேலை

**கணனிமயப்படுத்தப்பட்ட பணிகள்**

- வீல் எலமன்
- வீல் வலன்ஸ்
- குளிரூட்டி பொருத்துதல்
- சொக்கச் சோபர் ரெஸ்ரல்
- ஸ்கானிங் மெசின்
- ஏ.ரி.எவ். சேஞ்சர்
- கெற்லைற் செற்றிங்
- டிஜிட்டல் முறையில் காற்று சீர்செய்தல்
- ரயர் மாற்றுதல்

அனைத்து ஊர்தி உதிரிப்பாகங்களை மிக விரைவில் பெற்றுக்கொள்ள
**Mitsubishi, Toyota, Isuzu, Mazda, Nissan, Leyland, tata, Tafe, Mahendra, MF240**
இரும்பிலான அனைத்துக் கூரைவேலைகளும், கிறில், கதவுவேலைகள் கட்டடம் நிர்மாணிக்கப்படும் பகுதியில் வந்து பொருத்திக் கொடுக்கப்படும்.

**KODAN** ''உங்களது தேவையே எங்களது சேவை''
Auto Mobile Engineering Company
Jaffna Road, Paranthan Junction, Kilinochchi.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்புமலர் - 2004


அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!

* திருமணப் பட்டுப்புடைவைகளுக்கும்
* நவீன ரக ஆடைத் தெரிவுகளுக்கும்
* சிறுவர் சிறுமியர்க்கான சிறந்த உடைகளுக்கும்

சாறி பிளவுஸ் பீஸ் வகைகளுக்கு பிரத்தியேக காட்சியறை.

இளஞ்சிட்டுக்களின் இதயங்கவர்ந்திடும் இன்பமயச் சோலை

இன்றே நாடுங்கள்
மகாநதி புடைவையகம்
இல. 4 நவீன சந்தை சாவகச்சேரி. இல.16 நவீன சந்தை யாழ்ப்பாணம்.
இல.16 நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம். தொ.பே:- 222 2552


## வாசுதேவன் கண்ணனான்!

இருட்டினில் வாழ வேண்டும்!
இனிப்புகள் உண்ண வேண்டும்
கோடியுடுத்த வேண்டாம்
கூடி வாழ வேண்டாம்
கொண்டாட்டங்கள் வேண்டாம்
பாழுமரக்க நரகன்
வாழு முரிமை பறித்தான்! வதைத்தான்
கேட்டவுடன் ஓடி வந்தான்,
நாட்டமுடன் கண்ணன்
கொடியன் நரகனை யழித்தான்
விடிவை எமக்குத் தந்தான்!
கோடியை யுடுத்துங்கள்
வழிவா யேற்றுங்கள் தீபம்
வாய் மலர்ந்தருளினான்
பேசும் மொழியால்
"தீபாவளி" யென்றான்
வாசுதேவன் கண்ணன்!

ராகமணி மகேந்திரலிங்கம்



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.
ஆடவர், சிறியோர் முதல் பெரியோர்
வரை மகளிர் அனைவருக்கும்
மாறா நவீன ஸ்ரைலுக்கு ஏற்ற
ஆடைத் தெரிவுகளுக்கு
கௌரி ரெக்ஸ்ரைல்ஸ்
22(92), நவீன சந்தை, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

இழந்த சக்தியை மீண்டும்பெற்றிட
பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள்
குளுக்கோஸ் வாங்கும் போது
குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்
என்று கேட்டு வாங்குங்கள்
Packed By:
ROYAL Industries
Colombo - 12
☎:0112334603
அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம்மினிய தீபாவளி வாழ்த்துக்கள்!
ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567

அனைவருக்கும் எமது இனிக்கும் தீபாவளி
நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!




உலகப் புகழ் பெற்ற
Abans நிறுவனத்தின் உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட
LG Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For Abans
141, Power House Road Jaffna T.P- 021-222-5766

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
ஆல் நியூ
அருண் ஐஸ்கிறீம்



★ கொதிக்கும் வெயிலிலும் உங்களைக் குளிரவைத்து, களைப்பு நீங்கி புதிய உற்சாகத்தை அளிக்க...
★ சுத்தமாக, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட ஐஸ்கிறீம் வகைகள்...
மற்றும் அறுசுவை உணவுகளுக்கு
ஆல் நியூ அருண் ஐஸ்கிறீம்
133, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

பாரினில் அமைதி பற்றிப் பரப்பிட பிரகாசித்து வந்திடும் தீபத்திருநாளில் அனைவருக்கும்
எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.
இலத்திரனியல் மற்றும் அழகுசாதன அன்பளிப்புப் பொருட்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



டாட் என்ரபிறைஸ்
Dart Enterprise
02, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)
T.P:- 021 222 3098, 021 222 7622
Fax: 021 222 3098


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தீபாவளி சிறப்புமலர் - 2004

# நிலவுகின்ற சமாதானம் நிரந்தரமாய் நிலைத்திட தீபாவளித் திருமகளை கரம்கூப்பி வரவேற்போம்.

தீபங்கள் பேசும் தீபத்திருநாளாம் எம் இனத் தின் இன்பத்திருநாளாய் எம் வாசல் தேடி வந்திருக் கிறது தீபாவளியென்னும் புனித நாள்.

எமது கலை கலாசாரத்தின் பிறழ்வுகள் தாராள மாய் மலிந்திருக்கும் இவ்வேளையில், நாகரிகமென் னும் போர்வையில் உலகத்தின் தொழில்நுட்ப வளர்ச்சி யின் போக்கில் நாம் உழன்று கொண்டிருக் கின்றோம்.

கவிஞர் வைரமுத்து சொன்னதுபோல இன்று மனிதன்சுவாசிக்காமல் கூட உயிர் வாழுகின்ற நிலை யில் அவசர அவனியில் பவனி வந்து கொண்டிருக் கிறான்.

இத்தகைய நிலையில் தன்னை மறந்து, தன் இனத்தின் அடையாளத்தை மறந்து ஏதோவொரு மாயை உலகிற்குள் சஞ்சரிக்கும்போது எமக்கென குறிக்கப்பட்ட பண்டிகைகள் மூலம் தான் நாம் எம்மையும் எமது கலாசாரத்தின் தனித்துவத்தை யும் பேணுகின்ற ஓர் உன்னத நிலைக்குள் வருகின் றோம்.

தீபாவளி என்பது எமது இனத்தினுடைய குறிப் பாக ஆதியும் அந்தமும் இல்லாத மதமாகிய இந்து மதத்தைச் சார்ந்தவர்களுடைய ஒரு புனித நாள்.

இந்தத் தீபாவளித் திருநாள் என்பது நரகா சுரன் எனும் கொடிய அசுரன் வதை செய்யப்பட்ட நாளைக்குறிக்கிறது. அந்த அசுரன்தான் இறக்கும் தறுவாயில் தன் தவறையுணர்ந்தவனாக தான் இறந்த நாளை புனிதநாளாகவும், மக்களெல் லோரும் துன்பங்களை மறந்த நாளாகவும் கொண்டா டட்டும் என்று கூறி உயிர் விட்டான் என்பது புராண வரலாறு.

தேவர்களை துன்பப்படுத்திய, கொடுமைப்ப டுத்திய நரகாசுரன் எவ்வாறு அழிக்கப்பட்டானோ அதேபோல் நாமும் எமக்குள்ளே வைத்திருக்கும் தீய எண்ணங்களை அழிக்கின்ற நாளாக இந் நாளை ஏற்றுக்கொள்வோம்.

உலகத்தினுடைய உயிர் ஓட்டத்திற்கு அவசியமா னது அன்பு. அத்தகைய அன்பினை உள்ளத்தில் சூடிய இதயங்களாகமாறி எந்தவோர் உயிரையும் எமதுயிர் போல் கருதி அன்பு செய்வோம்.

பழிவாங்கல், வன்முறைகள் போன்ற தீயவை எமக்குள்ளே முளைக்க வேண்டாம். அன்பு, கருணை, இரக்கம், மனிதம் என்பவற்றை இன்றைய நாளில் நாம் இதயத்தில் விதைப்போம். அது நாளைய உலகில் முளைத்து பெரு விருட்சமாகி சமாதானமும் உள்ள அமைதிப்பூங்காவை தோற்றுவிக்கும். இதில் எவ் வித ஐயமுமில்லை.

நாம் கடந்த காலங்களில் பெரும் துன்பக் கடலைக் கடந்து வந்திருக்கின்றோம். துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் எமக்கு தேசியகீதமாய் தினம் ஒலித்தது.

அவலக்குரல்களும், அபயக்குரல்களும் நாம் தினம் கேட்கும் தமிழ்த் தாய் கீதமாய் ஒலித்தன. இன்றும் அந்த நாள்கள் எம் இதயத்தில் ஏற்படுத்திய காயங்களின் தழும்புகளாய் மீண்டும் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத் தினால் இன்று நிம்மதிப்பெருமூச்சோடு, அமைதி யாக வாழ்க்கையினை நகர்த்துகின்றோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்ட ரை வருடங்களை கடந்த நிலையிலும் எமக் கான சமாதானம் இன்னும் முழுமை பெறவில்லை. அதனால் மீண்டும் நாம் கேட்ட தமிழ்த்தாய் வாழ்த்தும், தேசிய கீதமும் ஒலிக்குமா? என்ற வினா எமது உள்ளத்தின் ஒரு மூலையில் எழத்தான் செய்கின் றது. இத்தகைய நிலையில்தான் எம்வாசல் தேடி எம் துயரங்களை துடைத்திட தீபத்திருமகளாய் வலது கால் எடுத்து வைக்கிறாள் தீபாவளி மகள். புதிய பூமியில் நாம் புதிதாய் பிறந்தவர்கள் போன்ற உணர்வுடன் புதுமைகள் படைத்திங்கு, புதியதோர் உலகம் படைக்க நாளைய எதிர்காலம் வளமுடனும், பலமுடனும், சிறப்புடனும் ஓங்கி வளர்ந்திட தீபாவளியை வரவேற்போம்.

புத்தாடை அணிந்து தீபாவளியைக் கொண்டா டும் நாம் புத்தாடையணிந்ததுபோல எமது உள்ளங்க ளில் உள்ள பழைய பகைமைகளையும் விரோதங்க ளையும் சலவை செய்து புதிய இதயத்தை தோற்று வித்து புதிய உலகில் புதுமைகள் படைத்திட பூரிப்பு டன் உறுதிபூணுவோம்.

எஸ். கவிதரன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்புமலர் - 2004

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

## மனம்போனபடி வாழத்....

காலத்தில் நற்காரியங்களைச் செய்வதில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

இயற்கையாகவே தெய்வத்தன்மை கொண்ட நம் ஆத்மா அசுர குணத்தின் வயப்பட்டு பாவங் களைச் செய்வதற்கு முயலும் வேளையில், திருவரு ளின் துணையால் அசுர குணம் விலகி வாழ்வில் ஒளி பிறக்கும் என்பதை உணர்ந்து கொள்ளும் வகையிலேயே தீபாவளித் தினத்தில் ஒளியேற்றி வழிபடும் வழக்கம் கைக்கொள்ளப் படுகிறது.

இக் கலியுகத்தில் நம்மிடையே தெய்வநம்பிக்கை குறைவடைந்தமையால் தீய செயல்களில் ஈடுபட விளைகிறோம். நாம் திருந்த வேண்டுமா னால் தெய்வ சிந்தனையையும் நம்பிக்கை யையும் நமது உள்ளத்தில் வளர்த்து, அசுரத் தன்மையை அழித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இத்தத்துவத்தை எமக்கு உணர்த்துவதே நரகாசுர வதமாகும்.

தனக்கு மேலான சக்தி-தெய்வ சக்தி ஒன்று உண்டென்பதையும், அச்சக்தியே தன்னை ஆட்டி வைக்கிறது என்பதையும் மறந்து, ஆணவ மேலீட்டால் மனிதன் மனம் போனபடி வாழ நினைப் பது அவனது ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவப் போவதில்லை என்பதையும், எப்போதோ ஒரு வேளையில் அவனது ஆணவம் ஆண்டவனால் அடக்கப்படும் என்பதையும் விளக்கும் வகையில் அமைந்ததே நரகாசுர வதமாகும்.

இந்த வகையில் தீபாவளித் திருநாள் ஆணவ இருள் அகன்ற நாள் இன்ப ஒளி பிறந்த நாள்.

### *தீபாவளி சம்பந்தமான கர்ணபரம்பரைக் கதைகள்*

தீபாவளிப் பண்டிகை குறித்து கர்ணபரம் பரையான பல கதைகள் கூறப்படுகின்றன. வனவா சத்தைப் பூர்த்தி செய்த ஸ்ரீராம பிரான் அயோத் திக்குத் திரும்பி வந்த நாளே தீபாவளித் திருநாளா கக் கொண்டாட ஆரம்பிக்கப்பட்ட தாக ஒரு கதை நிலவுகின்றது. தமது மன்னன் வனவா சத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதைக் கேள்வியுற்ற அயோத்தி மக்கள் மகிழ்ச்சி மேலீட்ட ால் வீடுகளிலும், தெருக்களிலும் தீபமேற்றிக் குதூகலத்துடன் ஸ்ரீ ராம பிரானை எதிர்கொண்ட தாகப் புராணக்கதைகளில் விவரிக்கப்பட் டுள்ளது.

தீபாவளித் தினத்தில் நரகாசுரன் வதம் செய்யப்பட்டான் என்ற புராணக் கதையே இந்து மத கோட்பாடுகளுக்கமைந்த விதத்தில் நம்பப பட்டு வந்துள்ளது.

"பௌமன்" என்ற அசுரன் பிரமனை வேண்டிக் கடுந்தவ மியற்றி பெறுதற்கரிய வரங்க ளைப் பெற்றுக்கொண்டான். அந்த வரங்களின் சக்தியால் இந்திரனை வென்று தேவலோகத் துக்கு அதிபதியானான். தான்பெற்ற வரங்க ளின் பலத்தினால் மமதை கொண்டு அவன் தேவர்கள், முனிவர்கள், மாந்தர்கள் ஆகிய சகல ரையும் கொடுமைப்படுத்த ஆரம்பித்தான். நாளுக்கு நாள் அதிகரித்த அவனது கொடுமை யைத் தாங்க முடியாத அவர்கள் தமது துன்பத் தை நீக்கித் தம்மைக் காத்தருளுமாறு கிருஷ்ண பரமாத் மாவிடம் சென்று முறையிட்டு நின்றனர்.

தேவர்கள், முனிவர்கள், மாந்தர்கள் என வேறுபாடின்றி சகலரையும் கொடுமைப்படுத் தியதன் காரணமாக அவன் நரகாசுரன் என அழைக்கப்படலானான்.

தன்னை நாடி நிற்கும் பக்தர்களின் துயர் துடைக்க ஸ்ரீ கிருஷ் ணபரமாத்மா சித்தம் கொண்டார். தம் தேவியாம் சத்தியபாமா வைத் தன் தேரைச் செலுத்துமாறு ஆணையிட்டு நரகா சுரன் மீது போர் தொடுத்தார் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா. ஆணவச் செருக்கால் அனைவ ரையும் துன்பப்படுத்திய நரகாசுரனைப் போரில் வதம் செய்து பக்தர்களைக் காத்தார் என்பது புராண இதிகாசக் கதை.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவால் தோற்க டிக்கப்பட்டுப் போர்க்க ளத்தில் உயிருக்குப் போராடிய வேளையிலேயே நரகாசுரனுக்கு தனது தவறுகள் புரிந்தன. தனது நடத்தைக ளால் கழிவிரக்கம் கொண்ட அவன் தனது உயிர் பிரியும் அந்த நாளை - ஐப்பசி மாதத்துக் கிருஷ்ண பட்சத்து சதுர்த்தசி நாளை தன் னால் கொடுமைக்கு உள்ளானவர்களின் விடுதலைப் பெருநாளாக அமைய வரமளிக்கு மாறு ஸ்ரீ கிருஷ்ணனை வேண்டிக் கொண்டான். அவன் மரணித்த அந்தத் தினமே அன்று முதல் தீபாவளிப் பண்டிகையாக உலகம் முழுவதிலும் வாழும் இந்துக்களால் கொண்டா டப்பட்டு வருகின்றது. அன்றைய சதுர்த்தசித் திதி அவனது ஞாபக மாக நரகாசுரன் சதுர்த்தசி என அழைக்கப்படுவதாகவும் புராணங்களில் குறிப்பி டப்படுகிறது.

இந்துக்கள் தீவிர மத நம்பிக்கை மிக்கவர் கள் மட்டுமன்றி, காலங்காலமாகக் கடைப்பிடிக் கப்பட்டுவரும் பாரம்பரியப் பழக்க வழக்கங்க ளைத் தொடர்ந்து பேணி வருவதில் பெரும் அக்கறை காட்டுபவர்களாயும் உள்ளனர்.

### தீபாவளியன்று செய்யவேண்டியவை

தீபாவளித் தினத்தன்று விடிகாலையில் எண்ணெய் தேய்த்துத் தலை முழுகுவோர் புண்ணிய தீர்த்தமாடிய பலனைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கையில் அது ஒரு வைதீக கரும மாகவும், பாரம்பரிய வழக்காகவும் கைக்கொள் ளப்பட்டு வருகின்றது.

புத்தாடை அணிதல், திருக்கோயில் தரிசனம் செய்தல், ஏழை எளியவர்களுக்குத் தம்மாலான தானதருமம் செய்தல் என்பவை இந்துமத அடிப்படையிலமைந்த வழக்கங்களாகும். இவை சீரான வாழ்க்கை நெறி பேணுதலுக்கும், மகிழ்ச்சியடையும் நோக்கையும் அடிப்படையா கக் கொண்டமைவன.

இந்து மதத்தவர்கள் பெருமளவில் வாழும் இந்தியா, இலங்கை, மலேசியா மற்றும் சிங்கப் பூர் ஆகிய நாடுகளில் வாழும் இந்துக்கள் மட்டு மன்றி, புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் இந்துக்கள் மத்தியிலும் இத்தீபாவளிப் பண்டிகை வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

பண்டிகைகள் மற்றும் விரதங்கள் என்பவை மனிதர்கள் தெய்வீக உணர்வைப் பெற்றுக்கொள்வ தற்கு வழி வகுப்பன, புற இருளைப் போக்குவ தற்கு சூரிய ஒளி பயன்படுவது போன்று அகவிரு ளைப் போக்குவதற்கு எமக்கு ஞானஒளி தேவை. அந்த வகையில் மனிதனுக்கு ஞானஒளியேற் றும் நாள்களாக விரதங்களும், பண்டிகைக ளும் அமைகின்றன.

நாட்டில் அடிக்கடி தர்மம் குன்றிப் போவ துண்டு; நாமே சில வேளைகளில் தர்மத்தை மறந்து வாழத் தலைப்படுகிறோம். இவ்விதம் நாம் மனம் தடுமாறி, திசைமாறிச் செல்லும் வேளைகளில் இவ்வித பண்டிகைகள் எமக்குத் தர்மத்தை நினைவுபடுத்துகின்றன. எண்ணெய் விளக்கை விட தர்ம விளக்கே நந்தா விளக்காகும். (அணையா விளக்கு) நந்தா விளக்கால் நாடு முழுவதும் ஒளி மயமாகும்.

### முறையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல் ஆகாது

மக்கள் மகிழ்ச்சிக்காகக் கொண்டாடப்படும் பண்டிகை எனக் காரணம் காட்டி இந்நன் நாளில் நம்மில் சிலர் மதுபானமருந்தி, மாமிச வகைகளை உண்டு மகிழ்வதை காணக் கூடிய தாயுள்ளது. புனிதமான இவ்வித நாள்களில் இவ்வித முறையற்ற செயற்பாடுகளில் ஈடுபடு வதால் தெய்வ நிந்தனைக்காளாவ துடன், சமூகத்தில் மற்றவர்களின் மதிப்பையும் இழக்க நேரிடுகின்றது. ஆதலால், இவ்வித பண்டிகை நாள்களில் இம் முறையற்ற செயற்பாடுகளைத் தவிர்த்து வாழமுயல்வது இன்றைய சமூகத் தேவையாகும்.

இந்து மதம் அன்பையும் கருணையையும் வற்புறுத்தும் மதமாகும். இந்துமதக் கிரியைகள் அர்த்தமுள்ளவை, எமக்கு இறைஆசி கிட்ட வேண்டுமானால் எமது உள்ளம் தூய்மையாய் இருத்தல் அவசியம். அழுக்காறு, அவா, வெகுளி, காமம், பொய், கொலை, இன்னாச்சொல் இவையற்ற தூய மனத்தி னராய், பகுத்தறிவு, இறைபக்தி, எல்லோரி டத்தும் அன்பு, பொதுநல நோக்கு என்பவற றைக் கடைக்கொண்டு இறைவனை மனதில் இருத்தி தீபாவளித் திருநாளை கொண்டாடி மகிழ்வோமாக.

பொன்வேளான்-












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் தீபாவளி சிறப்புமலர் - 2004

# மனம் போனபடி வாழத்தலைப்படாதீர்கள்; தீபாவளிப் பண்டிகை இதையே உணர்த்துகிறது

இந்து மதத்தவர்களின் திருநாள்கள், பண்டிகைகள் மற்றும் விரதங்கள் என இரு வகைப்படுவன; ஒவ்வொரு சமயத்தவரும் தத்தமது பண்பாடு சமூக, சமய மரபுகளைப் பேணி வாழ்க்கையைச் சிறப்புற அமைத்துக் கொள்வதற்கு உதவுவன பண்டிகைகளே. பண்டிகை என்பது நாம் நீராடி, புத்தாடை, ஆபரணங்கள் அணிந்து, மனதையும் உடலையும் தூய்மையாக வைத்து இறைவனுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, அறுசுவை உண்டிகளைப் படைத்து வழிபட்டு, அவனது பிரசாதமாகவே அவற்றை இன பந்துக்களோடு கூடி உண்டு மகிழ்வதாகும். இந்த வகையில் இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளுள் தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி என்பன மற்றைய அனைத்துப் பண்டிகைகளையும் விட முக்கியத்துவம் பெறுகின்றன.

பண்டிகைகள், சமயத்தோடு தொடர்புபட்டிருந்த போதிலும், ஓரளவு சுதந்திரத்தன்மை வாய்ந்தவையாகும். பண்டிகைகளில் வழிபாடு ஒரு முக்கிய அம்சமாக அமையினும், அவை உலகியல் மகிழ்ச்சியைப் பிரதான நோக்கமாகக் கொண்டமைந்துள்ளன.

அந்த வகையில், அமைந்த பண்டிகைகளுள் தீபாவளிப் பண்டிகை மிக முக்கியமானதாக- உலகம் முழுவதிலும் பரந்து வாழும் கோடிக்கணக்கான இந்துக்களால் வருடாவருடம் பக்திபூர்வமாகக் கொண்டாடப்படும் புனிதப் பண்டிகையாக அமைந்துள்ளது.

### தமிழர் பண்பாட்டை புலப்படுத்தும் விழா

தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையிலும் இத் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுவதாகவும் கொள்ளலாம். தமிழ் மக்களின் தேசிய ஒருமைப்பாட்டைக் குறிக்கும் பண்டிகையாக -ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி எவர், எத்தொழிலைச் செய்து பிழைக்கினும், எல்லோராலும் ஆண்டுக் கொருமுறை ஆவலுடன் கொண்டாடப்படும் திருநாளாக இத்தீபாவளி விளங்குகின்றது.

தீபாவளிப் பண்டிகையின் போது ஆலயங்களில் கூடி, ஆண்டவனை வழிபாட்டு, உறவினர்களைச் சந்தித்து, அண்டை அயலவர்களுடன் அன்பைப் பரிமாறி, வறிய மக்களுக்கு இயன்ற வரை தானதருமம் செய்வதுடன் கலை வெளிப்பாடுகள் போன்ற சமுதாய இணைப்புக்களுடனான களியாட்டங்களை ஒழுங்கு செய்து நடத்துவதன் மூலம் இப் பண்டிகை உயிர்த்துடிப்பு மிக்கதாக அமைகிறது. ஆயினும், சமயக் கோட்பாடுகளுக்கு முரண்படாத வகையில் தெய்வ வழிபாட்டுக்கு முதன்மையளித்துப் பண்டிகைகளைக் கொண்டாடி மகிழ்வதன் மூலம் அவற்றின் பண்பு கடைப்பிடிக்கப் படுவதுடன் உரிய பயனும் எட்டப்படுவதாகக் கொள்ள இயலும். இந்த வகையில் குடும்பம் மற்றும் சமூகம் ஆகிய இரண்டோடும் தனி மனிதன் பின்னிப் பிணைந்து மகிழ்வதாக இத்தீபாவளிப் பண்டிகை அமைகிறது.

தீபாவளித் திருநாள் ஆடம்பரத்துக்கோ அல்லது சமூகம் அனுமதிக்காத கேளிக்கைகளுக்கோ உரிய நாளன்று, இதன் அர்த்தத்தை நாம் அனைவரும் அறிந்து தெளிந்து கொள்ளுதல் நன்மையுடைத்து.

### ஆணவத்தை அகற்றி வாழ்வுக்கு ஒளி ஏற்றுவோம்

